

தனிப் பிரதி ரூ. 5/–
ஆண்டுச் சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்


மலர் : 9 இதழ் : 11 செப்டம்பர் – 2013

## "...உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது..."

(மாற்கு 5 : -34-)

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

சுதேச ஊழியரின் சாட்சி




## போதகர். வால்சிங் சாரேல்

**ஹக்வானி,** மத்தியப்பிரதேசம்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் வால்சிங் சாரேல். நான் மத்தியப்பிரதேசம் மாநிலம், ஜாபுவா மாவட்டத்தைச் சேர்ந்த ஹக்வானி கிராமத்திலுள்ள பீல் ஆதிவாசி. எங்கள் குடும்பம் இயேசுவை அறியாமல், பலவித பாவங்களுக்கு அடிமையாகி, சாபத்திற்குள்ளாக இருந்தது. எங்கள் குடும்பத்தில் சிறு குழந்தைகள் பிறந்தால், கொஞ்சம் வளர்ந்த பின் மரித்து விடுவார்கள். தொடர்ந்து பிசாசு எங்கள் சந்ததியை அழித்துக் கொண்டிருந்ததால் குடும்பத்தில் சமாதானமில்லாமல் இருந்தது.

ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. மன்னு பாபோர் என்பவர் எங்கள் கிராமத்திற்கு வந்து இயேசுவின் சுவிசேஷத்தை அறிவித்து கூட்டம் நடத்தினார்கள். அந்த கூட்டத்தில் பங்கெடுத்து, இயேசுவை அறிந்து, அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டு பாவங்களை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பைப் பெற்று இரட்சிக்கப்பட்டவுடன் குடும்பத்தில் சமாதானம் கிடைத்தது மட்டுமின்றி வாழ்வில் நல்ல மாற்றமும் ஏற்பட்டது. கெட்ட பழக்கவழக்கங்களில் இருந்து விடுதலை பெற்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டு தொடர்ந்து ஜெபக் கூட்டங்களில் பங்கெடுத்து, விசுவாசத்தில் வளர்ந்தோம்.

அதன்பின் ஒரு நாள் தேவன் எனக்கு எங்கள் பீல் மக்களைக் குறித்த ஆத்துமப் பாரத்தைக் கொடுத்ததால் ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து ஊழியம் செய்ய ஆரம்பித்தது மட்டுமின்றி, B.Th படித்து முடித்து, 20–11–2009 அன்று ஷாலோம் போதகராக பிரதிஷ்டை செய்யப்பட்டு தற்போது ஹக்வானி கிராம சபையின் போதகராகவும், சுற்றியுள்ள கிராமத்திலும் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். தேவன் எங்கள் சபைக்கு 48 குடும்பங்களைத் தந்திருக்கிறார். எனது மனைவி ஹக்லிபேன் ஹக்வானியிலுள்ள ஷாலோம் சிறுவர் விடுதியில் வார்டனாக இருந்து சிறு பிள்ளைகளைக் கவனித்து வருகிறாள். எனது மூத்த மகள் சூர்த்தா சாரேல், ஹக்வானி சபையில் ஞாயிறுப் பள்ளி ஆசிரியராக ஊழியம் செய்து வருகிறாள்.

தேவன் எங்களுக்கு நான்கு பிள்ளைகளைக் கொடுத்திருக்கிறார். எங்கள் குடும்பத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Mrs. Ramila Jeevakani Selvaraj, Bangalore.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600க்கும் அதிகமான ஸ்தல சபைகளை ஊருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்து கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரத தேசம் எங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்தி பணியாளரை அனுப்புவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

தேவ கிருபையினாலும், உங்கள் ஊக்கமான ஜெபங்கள் மற்றும் அன்பான ஆதரவினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதால், தேவனுக்கு நன்றி செலுத்துவதோடு உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து எங்கள் மனமார்ந்த நன்றியை கூறுகிறோம். கடந்த ஆகஸ்ட் மாதம் முழுவதும் தேவன் சுதேச ஊழியர்கள் கூடுகை, முழு இரவு ஜெபம், மூத்த ஊழியர்களின் ஜெபக் கூடுகை மற்றும் **Shalom Charity Mission** மூலம் நடைபெறும் அனைத்து பணிகளையும் அபரிமிதமாக ஆசீர்வதித்து வருகிறார்.

செப்டம்பர் மாதத்தில் 3 மாநிலங்களில் பிராந்திய வாரியாக நடைபெற உள்ள மூப்பர்கள் முகாம் மற்றும் வாலிபர்கள் முகாம்களை தேவன் ஆசீர்வதிக்க பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் இந்த மாதத்தில் தமிழ்நாட்டில் இருந்து ஊழியங்களைத் தாங்கும் அநேக தேவ பிள்ளைகள் மற்றும் போதகர்கள் பணித்தளங்களைப் பார்வையிட வரவிருக்கும் இவர்களின் பயணமும், ஊழிய திட்டங்களும் ஆசீர்வாதமாக அமைய ஜெபியுங்கள்.

3 மாநிலங்களில் 26 கிராம ஆலயங்கள் தடைகளின்றி கட்டிமுடிக்க ஜெபிப்பதோடு 2013–ம் ஆண்டின் இறுதிக்குள்ளாக 100 புதிய சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும் அறுவடைக்கு எஜமான் வேலையாட்களை எழுப்பித்தர வேண்டிக்கொள்ளுங்கள்.

எங்கள் அன்பு மகள் **ஜாய் ஷெக்கினா** 4வது வருட மருத்துவக்கல்வியை செப்டம்பர் மாதத்தில் தொடர ரஷ்யாவிற்கு சென்றிருக்கும் அவளுக்காக விசேஷமாக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன். பெங்களூரில் டிசம்பர் 13 வரை விசேஷித்த ஆடியோ பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் **ஷாலோம்** -க்காகவும், **டைட்டஸ்** மற்றும் **மெர்லின்** சிறப்பாக பணித்தளத்தில் ஊழியங்களை நிறைவேற்றி வருவதற்காகவும் ஜெபியுங்கள்.

என்னுடன் இணைந்து ஊழியங்களை நிறைவேற்றும் தாகோத் பணித்தள அலுவலக ஊழியர்கள், தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள், ஷாலோம் ஊழிய முன்னேற்றப் பணி ஊழியர்கள், தியாகத்துடன் பணியாற்றும் ஷாலோம் பிரதிநிதிகள், மற்றும் Sharing Love Mission, Shalom Charity Mission, Board Members யாவருக்காகவும் ஜெபியுங்கள். ஷாலோம் ஊழியப் பங்காளர்களாகிய உங்களுக்காக தினமும் ஜெபிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

**“...என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.”** (யோவான்:14:12) தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள
09377445468 (குஜராத்) 9443965468 (தமிழ்நாடு)



# ®ÑYôNúU Sm ù_Vm!



சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.** கிறிஸ்தவ ஜீவியத்தில் விசுவாசம் என்பது நங்கூரம் போன்றது. **"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது"** (எபி:11:1) நம்பப்படுகிறவைகளை உறுதிப்படுத்தும்படியாக விசுவாசம் கிரியை செய்கிறது. காணப்படாதவைகளின் நிச்சயமாக விசுவாசம் இருக்கிறபடியால் அதை நம் ஜீவியத்தில் அப்பியாசப்படுத்த வேண்டும். அப்போஸ்தலர் தோமா இயேசுவைக்கண்டு அவர் காயங்களில் கைபோட்டால் ஒழிய நம்பமாட்டேன் என்றார். ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்துவை** கண்டு விசுவாசிக்கிறவர்களைக்காட்டிலும் காணாமல் விசுவாசிக்கிறவர்களே பாக்கியவான்கள் என்றார். (யோவான்: 20: 29)

காணாதபடி இருக்கிற உலகத்தின் காரியங்கள் மற்றும் ஆவிக்குரிய காரியங்கள் உண்டு. இரட்சிப்பு, கிருபை, பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்கள், உயிர்தெழலின் நம்பிக்கை, நியாயத்தீர்ப்பு நித்திய ஜீவன் போன்ற ஆவிக்குரிய காரியங்களும் விடுதலை, தெய்வீக சுகம். பொருளாதார ஆசீர்வாதங்கள் , சந்ததியின் ஆசீர்வாதங்கள் போன்ற உலகத்திற்குரிய ஆசீர்வாதங்கள், இவைகளை நாம் விசுவாசத்துடன் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும் என தேவன் முன் குறித்து வைத்துள்ளார். வேதத்தில் இதைக்குறித்து பல காரியங்கள் எழுதப்பட்டிருந்தாலும் மூன்று காரியங்களை மட்டும் ஆவியானவரின் ஒத்தாசையுடன் தியானிப்போம்.

## இரட்சிப்புக்கேற்ற விசுவாசம்

லூக்கா 8ம் அதிகாரம் 43–48 வரையுள்ள பகுதியில் 12 வருட பெரும்பாடுள்ள ஸ்திரியின் விசுவாசத்தை இயேசு கண்டார். இயேசுவின் வஸ்திரத் தொங்கலையாவது தொட்டால் நான் சுகமடைவேன் என்று விசுவாசித்தாள். இயேசுவினிடத்தில் வல்லமை உண்டு. அவர் சிருஷ்டி கர்த்தர். சர்வ வல்லமையுள்ள தேவன்; அவரிடத்தில் கிருபை, மன்னிப்பு, தயவு உண்டு என்ற விசுவாசத்துடன் தன்னைத் தாழ்த்தி இயேசுவினிடத்தில் வந்தாள். உலகத்தால், உலகத்தின் பிரயாசங்களால் வேதனைகளை அனுபவித்தாள். ஏன் இந்தப் பாடுகளும் சாபங்களும் என்று கலங்கிய அவள் இயேசு என்னை முற்றிலும் விடுவிக்க வல்லவர் என்று விசுவாசித்து, அற்புதமாக சுகத்தை மட்டுமல்ல இரட்சிப்பையும் அவள் பெற்றுக்கொண்டாள். அப் 14:9 வாசித்துப் பாருங்கள். லிஸ்தீராவிலே தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாய் இருந்த மனிதனிடத்தில் பவுல் இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்தைக் கண்டார். தெய்வீக சுகத்தை மட்டுமல்ல இயேசுவின் நாமத்தில் இரட்சிப்பையும் பெற்றுக் கொண்டான். உலக நன்மைகளுக்காக மட்டும் தேவனை நாம் தேடாதபடி இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்துடன் தேவனிடத்தில் வந்து ஜெபிக்க வேண்டும்.

பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நான் ஒரு காரியத்தைக் கண்டு மிக ஆச்சரியப்பட்டேன். பிசாசு பிடித்து அசுத்த ஆவியால் கட்டப்பட்டு, வியாதி வேதனையுடன் கூட்டங்களுக்கும், ஆலய ஆராதனைகளுக்கும் வருவார்கள். விசுவாசிகளின் பாடல் ஆராதனையில் பங்கு பெற்று வசனத்தை கருத்தாக அவர்கள் மொழியான பீல் மொழியில் சுதேச ஊழியரின் செய்திகளைக் கேட்டு, இயேசுவின் நாமத்தில் விடுதலை, சுகம் பெற்று திரும்புவார்கள். அப்படிப்பட்ட அநேக குடும்பங்கள் அவர்களாகவே சாராயம், பீடி, திருட்டுத் தொழிலை விட்டு இயேசுவை நேசிக்க ஆரம்பித்து பாவங்களை அவர்களே விட்டு மனந்திரும்புவதைக் காணலாம். அதுதான் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம்.

அப் 16:31 ல் பவுல் சொல்கிறார், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். முதலாவது நமக்கும் நம் குடும்பத்திற்கும் தேவையான விசுவாசம் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம். நாம் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தபடியால் உண்டான விசுவாசமல்லாமல், பாவமன்னிப்பைப் பெற்று கிறிஸ்துவிடன் வாழும் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம். நம் முழுக்குடும்பமும், நோவாவின் முழுகுடும்பமும் விசுவாச பேழையில் காக்கப்பட்டது போல சபையாக பேழைக்குள் நம் குடும்பம் இரட்சிப்பின் அனுபவத்தை பாதுகாக்கப்பட வேண்டும். ஜீவ புத்தகத்தில் நம் குடும்பத்தாரின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளதா? உயிர்த்தெழுதலின் நம்பிக்கை நித்திய ஜீவனுக்கேற்ற மற்ற நம்பிக்கை நமக்கும், நம் குடும்பத்திலும் உண்டா? **“பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (எபேசியர்: 3: 8)”** இப்படிப்பட்ட இரட்சிப்பின் விசுவாசத்தை தேவன் தாமே அனைவருக்கும் தருவாராக.!

## பெற்றுக்கொள்ளத்தக்கதான ஆபிரகாமின் விசுவாசம்

பிதாவாகிய தேவன் ஆபிரகாமை தெரிந்து கொண்டு பாவங்கள், சாபங்கள் நிறைந்த உலகத்தை ஆசீர்வதிக்க சித்தம் கொண்டார். ஆதி: 12:2,3, ல் 7 பரிபூரண ஆசீர்வாதங்களை கட்டளையிட்டார். ஆதியாகமம் 15 ம் அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை அனல் மூட்டும்படியாக வெளியே அழைத்து வந்து வானத்து நட்சத்திரங்களைக் காட்டி, உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என உறுதிப்படுத்தியிருக்கிறார். ஆதி: 15:6 ல் ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.

ஆபிரகாம் தேவனை எப்படி விசுவாசித்தார் என்று ரோமர் 4: 17ல் வாசிக்கிறோம். மரித்தோரை உயிர்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல் அழைக்கிற தேவனிடத்தில் விசுவாசமாக இருந்தான். தன் சரீரம் செத்துப் போனதையும், மனைவி சாராளின் கர்ப்பம் செத்துப்போனதையும் அவன் எண்ணாதிருந்தான். சர்வ வல்லமையுள்ள தேவன் யேகோவா எல்ஷடாய், தாயின் கர்ப்பத்தில் நம்மை உருவாக்கி இருக்கிறார். எங்கள் சரீரம் செத்துப்போனதாய் காணப்பட்டாலும் உயிர்பிக்க வல்லவர், முற்றிலும் புதிதாக்க வல்லவர் தேவன்தான் என்று விசுவாசித்தான். நம் வாழ்க்கைப் பாதையிலும் ஊழியப்பாதையிலும் நம்பிக்கையற்ற சூழ்நிலைகள் வரும் போதும், மரித்துப்போன காரியங்களாய் காணப்படும்போதும், நாம் அவைகளை எண்ணக்கூடாது. அநேக ஜனங்கள் அவைகளையே எண்ணிக்கொண்டிருக்கிறபடியால் விசுவாசம் நமக்குள் கிரியை செய்யாது. தெய்வீக சுகம் மற்றும் தெய்வீக ஆசீர்வாதங்களை பெற முடியாது.

**சகோ.மோகன் சி. லாசரஸ்** அடிக்கடி பல இடங்களில் குறிப்பாக எங்களிடத்தில் பேசும் போது, நற்செய்தி கூட்டங்களை பல இடங்களில் நான் நடத்தியுள்ளேன். பீல் மக்கள் மத்தியில் நற்செய்தி கூட்டங்களை நடத்தும் போது ஒருவித்தியாசமான அனுபவத்தை செய்தி கொடுத்து ஜெபிக்கும்போது பீல் மக்கள் விசுவாசம் அற்புதமானது. இந்த பீல் மக்களுக்கு அவிசுவாசிக்க தெரியாது என்பதைக் கண்டு தேவனைத்துதிக்கிறேன். ஆனபடியால் பிசாசின் பிடியிலிருந்தும், சகல நோய்களிலிருந்தும் அற்புத விடுதலையை இயேசுவின் நாமத்தில் பெற்ற நூற்றுக்கணக்கான சாட்சிகளை மேடையில் காண்கிறோம் என்றார்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கையிலும் ஊழியப்பாதையிலும் இப்படிப்பட்ட நம்பிக்கை அற்ற சூழ்நிலைகளை கடந்து வருகிறீர்களா? ஆபிரகாமை போல் இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல் அழைக்கிற தேவன் உங்களுக்கு எது இல்லையோ எது தேவையோ அதை உண்டு என்று கொடுக்க வல்லவர். நம்தேவன் நம்பிக்கையற்ற சூழ்நிலைகளிலெல்லாம் உயிர்தெழுந்த இயேசுவின் நாமத்தில் நமக்கு வெற்றியையும், ஆசீர்வாதத்தையும் தருவார். ஆண்டவரே எனக்குள் கடுகளவு விசுவாசத்தைத் துவக்கி என்னை ஆசீர்வதியும் என்று ஜெபியுங்கள் அப்பொழுது அற்புதத்தைக் காண்பீர்கள்.

## சுதந்தரித்துக் கொள்ளும் விசுவாசம்

இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின தேசமாகிய கானான் தேசத்தை சுதந்தரிக்க முழுவதுமாக வழிநடத்தினார். பலத்த கரத்தையும், ஓங்கிய புயத்தையும், அற்புதமான விடுதலையையும், உன்னதமான பூரிப்பையும், தெய்வீக நடத்துதலையும் கண்டார்கள். அப்பொழுது கானான் தேசத்தை 12 பேர்கள் வேவுபார்க்கச் சென்ற போது, தேசத்தின் ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொண்டார்கள். 10 பேர்கள் துர்செய்தியைப் பரப்பி அவிசுவாச வார்த்தைகளை கூறி முழு இஸ்ரவேல் ஜனங்களை வழி விலகச் செய்து, தேவனுடைய கரத்தை மறந்து விட்டதால் தேவன் துக்கப்பட்டார்.

ஆனால் காலேப்பையும், யோசுவாவையும் பாருங்கள் . எண்ணாகமம்: 14:7, 8 ல் இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும் நோக்கி: நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தார், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார். எண்ணாகமம் : 13:30ல் அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக் கொள்வோம். நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம் என்று விசுவாச வார்த்தைகளைக் கூறி விசுவாசித்தார்கள். தேவனுடைய கோபாக்கினையைப் பாருங்கள். ஆறு இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் அனைவரும் வனாந்தரத்தில் விழுந்து இறந்து போனதால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியவில்லை. இரண்டு பேர்களான காலேபும், யோசுவாவும் மட்டுமே பிரவேசித்தார்கள்.

எனக்கன்பானவர்களே, நாம் அவிசுவாச வார்த்தைகளை பேசும் போதும், கேட்கும்போதும், அதை நம்பும் போதும், தேவன் துக்கப்படுகிறார். நம்முடைய விசுவாசம் உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். விசுவாசத்துடன் மலையைப்பார்த்து பெயர்ந்து போ என்றால் அது நடக்கும். விசுவாசிக்கிறவனுக்கோ எல்லாம் கூடும் என இயேசு சொன்னார்.

காலோப், யோசுவாவுக்கு விசுவாச வார்த்தைகளை அறிக்கை செய்தபடியால் யோர்தானை கடந்தும் எரிகோ கோட்டைகளை தகர்தார்கள். யோசுவா சூரிய சந்திரனை நிறுத்தியிருக்கிறார். கர்த்தர் தாமே அவர்களுக்காக யுத்தம் செய்தார் என வேதத்தில் வாசிக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நம் குடும்ப வாழ்க்கையில் தேவனுடைய வாக்குதத்தத்தை சுதந்தரிக்க முடியாதபடி அவிசுவாசப் வார்த்தைகளைப் பேசாமல் நிச்சயமாக கர்த்தர் தேவையானவற்றைத் தருவார் என யோசுவாவைப் போல் விசுவாச வீரராய் மாறி விசுவாச வார்த்தைகளை அறிக்கை செய்தால் சபை மற்றும் ஊழியப்பாதையில் தேவன் வாக்குதத்தம் பண்ணின ஆத்துமாக்கள், கட்டிடங்கள் மற்றும் திட்டங்கள் போன்ற ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள உதவி செய்வார்.

1993 ம் ஆண்டு ஊழியப்பாதையில் ஆரம்ப வருடங்களில் ஜாலோத் பணித்தளத்தில் பேய்பங்களாவில் வாழ்ந்த நாங்கள் புதிய ஒரு பெரிய பங்களாவில் வாடகைக்கு தங்கி ஊழியம் செய்யும் போது காணிக்கை மிகவும் குறைவாகக் கிடைத்து கொண்டிருந்தது. எங்கள் வீட்டில் மன்னுபாய் என்ற வேலைக்காரன் எங்களுடன் இருந்து உதவி செய்து கொண்டிருக்கும்போது ஒரு நாளுக்கு இரண்டு முறை என்னிடமும், என் மனைவி வஹிதாவிடமும் சார், சிஸ்டர் இந்த பங்களா நமக்கு தான் என்று சொல்லிக் கொண்டேயிருப்பான். சில நேரங்களில் நான் இவன் இப்படி பேசுகிறானே என நினைப்பதுண்டு. ஆனால் 3 வருடங்களில் நிச்சயமாகவே அந்த பங்களா வை தேவன் எங்களுக்குக் கொடுத்துவிட்டார்.

தேவன் உங்களுக்கென்று வாக்கு பண்ணினவைகளை விசுவாச அறிக்கை செய்து சுதந்தரித்துக் கொள்ளுங்கள் . சபை மற்றும் ஊழியப்பாதையில் தடைகளை உடைத்தெறிந்து, பிசாசின் கோட்டைகள், ஆளுகைகளை முறியடித்து யோசுவா மற்றும் காலேப்பைப் போல் விசுவாச அறிக்கை செய்து முன்னேறிச் சென்று தேசத்தைக் சுதந்தரித்துக் கொள்ள என் அவிசுவாசத்தை நீக்கி விசுவாசத்தைத் தாரும் என்று ஜெபித்து, விசுவாசித்து தேசத்தை சுதந்தரிப்போம் அல்லேலூயா !

## குழந்தை ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

*நீங்கள் அனுப்பும் குழந்தை ஆதரவுத் தொகையை* **Shalom Charity Mission –** என்ற பெயருக்கு **D.D., Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிகவும் தாழ்மையாக கேட்கிறோம். இவ்வாறு நீங்கள் அனுப்பும்போது நாங்கள் அதை **Shalom Charity Mission -** கணக்கில் வரவு வைத்து, ஆதிவாசி சிறுவர்களுக்கென்று பயன்படுத்த உதவியாக இருக்கும்.

மேலும் நீங்கள் வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும்போது மறவாமல் எங்களுக்கு தெரியப்படுத்த அன்புடன் கேட்கிறோம். இல்லையென்றால் காணிக்கை செலுத்தியது யார் என்பது தெரியாமல் போக வாய்ப்புள்ளது.

# அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைக் குறித்து உங்களுடன்.



கிறிஸ்துவுக்குள் மிக அன்பான வாசகர்களே,

உங்கள் கரங்களில் மாதந்தோறும் நாங்கள் அனுப்பும் **அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலருக்காக** தேவனைத் துதிக்கிறோம். பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் தரிசனப் பணிகளையும், ஆவியானவர் நடத்தி வரும் அற்புதமான செயல்களையும், பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் எழுப்புதல் சாட்சிகளையும், ஷாலோம் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் ஆத்தும பாரத்துடன் எழுதி அச்சிட்டு உங்களுக்கு அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த பத்திரிக்கை பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் நற்செய்திப் பணியை தாங்குவோர், மிஷனெரி ஆதரவாளர்கள், ஆதிவாசி மாணவர் ஆதரவாளர்கள், ஆலய கட்டுமான உதவி ஆதரவாளர்கள் மேலும் ஏதாவது ஊழியக்காரியத்திற்காக நிதி உதவி அனுப்புவர்களுக்கு I.D எண் கொடுக்கப்பட்டு அனைத்து ஆதரவாளர்களுக்கும் மாதந்தோறும் தொடர்ந்து அனுப்படுகிறது.

மட்டுமல்லாமல் எங்கள் மிஷனெரி கூடுகை, மற்றும் நாங்கள் அழைக்கப்படும் ஆலயங்களில் வரும் போது உங்கள் முகவரியைப் பெற்றுக் கொண்டு உங்களுக்கும், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நானோ என் ஊழிய குழுவினரோ சந்திக்கும் போது கொடுக்கப்பட்ட உங்கள் முகவரிகளுக்கும் மாதந்தோறும் தவறாமல் அனுப்பி வருகிறோம்.

இந்த பத்திரிக்கையை ஆத்துமப் பாரத்துடனும், ஜெபத்துடனும் உருவாக்கி அனுப்புவதில் அச்சிடும் செலவு, தபால் செலவு மற்றும் இதரச் செலவுகள் என்று பல ஆயிரங்கள் மாதந்தோறும் பண்ணப்படுகிறது. ஆகிலும் பத்திரிகையைப் பெறுகிற உங்களில் அநேகர் வருடம் ஒரு முறைகூட வட இந்திய பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஆத்தும ஆதாயப் பணிக்காக காணிக்கை அனுப்புவது கிடையாது.

ஆகவே இனி வரும் மாதங்களில் குறைந்தது வருடத்திற்கு ஒரு முறை **"ஷாலோம்"** ஊழியங்களுக்கு காணிக்கை அனுப்புகிறவர்களுக்கு மட்டும் பத்திரிக்கையை அனுப்ப தீர்மானித்து உள்ளோம். தயவாக இம்மாதம் பத்திரிகையைப் பெற்றுக் கொள்கிற நீங்கள் இதுவரை காணிக்கை அனுப்பவில்லையெனில் உடனடியாக இம்மாதம் உங்களால் இயன்ற காணிக்கையை தவறாது அனுப்பி ஊழியங்களைத் தாங்க வேண்டுகிறோம். காணிக்கை அனுப்ப வேண்டிய விவரங்களை 35ம் பக்கத்தில் வாசித்து ஜெபித்து அனுப்ப வேண்டுகிறோம்.

உங்கள் அன்பான ஒத்துழைப்புக்கும், அன்பிற்கும், ஜெபத்திற்கும், ஆதரவிற்கும் மிக்க நன்றி! தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே**
**கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்".** கலா. 6 : 2

**பேராயர். V. தேவதாஸ்,** ஆசிரியர், அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்.

# ஷாலோம் மிஷனெரி ஊழியத்திற்கு தன்னார்வமாய் செயல்பட பிரதிநிதிகள் தேவை

தேவனுடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் ஊழியங்களின் மூலமாக திரளான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக தேவனால் முன் குறிக்கப்பட்ட 48 சுதேச ஊழியர் குடும்பங்கள் மூலமாக தேவன் பல அற்புதங்களைச் செய்து ஒவ்வொரு நாளும் புதிதாக ஆத்துமாக்களை சபையில் சேர்த்து வருகிறார்.

அதே நேரத்தில் இவர்களை ஆவிக்குரிய பாதையில் நடத்த பல பயிற்சிகள், கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். ஊழியர்களைத் தாங்க வேண்டும், ஆலயங்கள் கட்டப்பட வேண்டும், அவர்கள் குழந்தைகளைப் படிக்க வைத்து பராமரிக்கப்பட வேண்டும். இது போன்ற காரியங்களை நாம் நிறைவேற்ற நமக்கு அநேக தேவைகள் உண்டு. இவற்றை சந்திக்க புதிய ஆதரவாளர்கள் மற்றும் ஆதரவாளர்களிடமிருந்து காணிக்கைகளை சேகரித்து எங்களுக்கு அனுப்பும் பிரதிநிதிகளும் தேவை.

உங்களில் அநேகர் ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்ய வாஞ்சை இருந்தும், தங்களுடைய சூழ்நிலைகளின் காரணமாக செய்யமுடியாமல் இருக்கலாம். ஆகவே நீங்கள் தேவனுடைய இந்த உன்னதமான பணியை உங்கள் பகுதியிலேயே பகுதி நேரமாக நிறைவேற்றலாம்.

இதுவரை நமது ஷாலோம் ஊழியங்களுக்கு 22 முழு நேர பணியாளர்களும், 65 தன்னார்வத் தொண்டர்கள் தமிழகத்தில் வெவ்வேறு இடங்களில் செயலாற்றி வருகிறார்கள். தேவன் தாமே அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து இம்மட்டுமாய் வழி நடத்தி வருகிறார். இன்னும் அநேக ஊர்களிலும் மாவட்டங்களிலும் பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்.

**குறிப்பாக கீழ்க்கண்ட ஊர்களில் உடனடியாக பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்.**

**தமிழ்நாடு :–**

| | | | |
|---|---|---|---|
| நாசரேத் | ஆறுமுகநேரி | கோவில்பட்டி | நாகர்கோவில் |
| சிவகாசி | மதுரை | தேனி | திண்டுக்கல் |
| ராமநாதபுரம் | சிவகங்கை | திருச்சி | கிருஷ்ணகிரி |
| வேலூர் | பாண்டிச்சேரி | | |
| **இந்தியா :–** | பெங்களூர் | மும்பை | டெல்லி |
| **வெளிநாடு :–** | சிங்கப்பூர் | அமெரிக்கா | மத்திய கிழக்கு நாடுகள் |

மேற்கண்ட இடங்களில் மட்டுமல்ல மற்ற இடங்களிலும் வாஞ்சையுள்ள தன்னார்வத் தொண்டர்கள் இந்த உன்னதப் பணிக்கு அழைக்கப்படுகிறீர்கள். வாஞ்சையுள்ளவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். தேவன் தாமே உங்கள் வாஞ்சையையும், கையின் பிரயாசங்களையும் ஆசீர்வதிப்பாராக.

தொடர்புக்கு : தலைமை அலுவலகம் செல் : 09345675468

# பணித்தளத்திலிருந்து
# மனம் திறந்து உங்களுடன்



**தேவன் தந்த பரமதரிசனம்**

1981 ம் ஆண்டு தேவன் என்னை தேவதாஸ் என்று பெயர் சொல்லி அழைத்து இரட்சித்து அபிஷேகித்தார். மட்டுமல்லாமல் திருடர்கள், கொள்ளையர்கள், மந்திரவாதிகள், குடிகாரர்களை இரட்சித்து என் சபையை உன் மூலமாக ஸ்தாபிப்பேன். அப்போஸ்தல ஊழியத்தை உனக்குத் தந்து ஒரு ஜாதி மக்களுக்கு உன்னை ஆசீர்வாதமாக வைப்பேன் என்று திருவுளம் பற்றினார். அதன்படி 1985 ம் ஆண்டு வரை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிலும்; 1985 ஜீலைமாதம் திருமணமான பின்பு "**பீல் மக்கள் தரிசனத்தை**" நாங்கள் தேவனிடத்தில் பெற்று IMS மூலமாக 1990 வரை பணிகளை நிறைவேற்றும்படி தேவன் கிருபை தந்தார்.

பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலின்படி 1991 ஜுலை மாதம் முதல் "**ஜாலோத்**" ஊரை மையமாக வைத்து ஊழியத்திற்கு கிடைத்த ஒரு "**பேய் பங்களாவில்**" ஷாலோம் ஊழியங்களை ஆரம்பித்தோம். நடத்தப்பட்ட சிறிய ஜெப கூடுகையில் பங்கெடுத்து ஒரு சில குடும்பங்களில் உள்ளவர்கள் பாவங்கள், சாபங்கள், நோய்களிலிருந்து விடுதலை பெற்று இப்படியாக பலநூறு குடும்பங்கள் சில மாதங்களில் தேவனை ஏற்றுக் கொண்டார்கள்.

**சுதேச ஊழியர்களின் எழுச்சி**

குஜராத், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசங்களில் 7000 கிராமங்களில் வாழும் சுமார் 1 கோடி பீல் மக்களின் முழு இரட்சிப்பிற்காக , 7000 கிராமங்களில் சபைகள் கட்டப்பட, 7000 கிராமங்களில் சொந்த பீல் ஜனங்களின் இரட்சிப்பிற்காக பாரம் கொண்ட பீல் சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட தேவன் பாரம் தந்தார். இது வரை அந்தந்த கிராமங்களில் இருந்து சுமார் 500 சுதேச ஊழியர்கள் குடும்பங்களை எழுப்பித் தந்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! இவர்களுக்காக ஆத்தும பாரத்துடன் ஜெபியுங்கள்.

- ☞ பீல் சுதேச ஊழியர்களின் பரிசுத்த வாழ்விற்காக
- ☞ மூத்த சுதேச ஊழியர்கள் ஆவியில் நிரப்பப்பட்டு வல்லமையாக ஊழியம் செய்ய
- ☞ சுதேச ஊழியர்கள் குடும்பங்கள் குறிப்பாக அவர்கள் மனைவிமார்களை தேவன் பயன்படுத்தி பிள்ளைகளை சந்தித்து ஆசீர்வதிக்கப்பட
- ☞ 2017 ஜீலை மாதத்திற்குள் இன்னும் 500 சுதேச ஊழியர்கள் அதாவது 1000 பீல் சுதேச ஊழியங்கள் உருவாக்கப்பட
- ☞ தேவன் அவர்கள் கையில் கொடுத்த திருச்சபையை சரியாக கண்காணிக்க, ஆத்துமாக்களை சரியான ஆவிக்குரிய வளர்ச்சியில் நடத்த பாரத்துடன் ஜெபியுங்கள்.

## சுதேச ஊழியர்களின் மாதாந்திரக் கூடுகை

தேவ கிருபையால் ஒவ்வொரு மாதமும் மூன்று மாநிலங்களிலுள்ள சுதேச ஊழியர்களுக்கான சிறப்புக் கூடுகை நடைபெற்று வருகிறது. இக்கூடுகையில் பாடல், துதி ஆராதனை, மன்றாட்டு ஜெபம், தேவ வார்த்தை மற்றும் சாட்சிகள் மேலும் ஊழியத் திட்டத்திற்கான ஆலோசனைகள் கொடுக்கப்படுகிறது. பல கிலோ மீட்டர் தொலைவிலிருந்து ஊழியத்திற்கு தவறாமல் கடந்து வந்து பங்கு பெறுகிறார்கள். சுதேச ஊழியர்கள் கூடுகை கிறிஸ்துவில் களிகூறும் மாபெரும் கொண்டாட்டமாக இருக்கும். அதுபோல, நம்முடைய பணித்தள அலுவலக ஊழியர்கள், Compassion Project ஊழியர்கள், ஷாலோம் பள்ளி மாணவ விடுதி ஊழியர்கள், மருத்துவப் பணி ஊழியர்கள் அனைவருக்கும் மாதந்தோறும் கூடுகைகள் நடத்தப்படுகிறது.

**பேராயர். V. தேவதாஸ்** மற்றும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களின் தலைமையில் மாதந்தோறும் நடத்தபபடும் இந்தக் கூடுகைகளில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் வல்லமையும் தேவையான ஆசீர்வாதங்களும் கிடைக்கப் பெற ஜெபியுங்கள்.

## ஷாலோம் வாலிபர் முகாம்கள்

தேவ கிருபையால் ஷாலோம் ஊழியத்தின் மூலம் சுமார் 5000 வாலிபர்களைத் தேவன் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு வருடமும் இவர்கள் கிறிஸ்துவுக்குள் வளர பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்று திருச்சபைக்கும் பீல் மக்களுக்கும் பாரத தேசத்திற்கும் ஆசீர்வாதமாய் விளங்க சிறப்பு முகாம்கள் மற்றும் இந்த செப்டம்பர் மாதத்தில் 10 இடங்களில் நடைபெற உள்ள வாலிபர் முகாம் ஆசீர்வாதிக்கப்படவும், குறிப்பாக அதற்குத் தேவையான நிதி ரூ. 1,50,000 கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

## ஷாலோம் சிறுவர்களுக்கான சிறப்பு ஊழியம்

தேவ கிருபையால் 400 க்கும் அதிகமான கிராம சபைகளில் சிறுவர்களுக்கான ஓய்வு நாள் பாடசாலை சரிவர நடைபெற்று வருகிறது. 52 வாரங்களுக்கான வேத பாடப் பயிற்சியோடு பாடல்கள், குறுகதைகள், மனதில் பதியவைக்கும் சத்தியத்தை விளக்கும் கதைகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இதை நடத்துகிற சுமார் 400 ஓய்வு நாள் பாட ஆசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சி 2 மாதங்களுக்கு ஒரு முறை கொடுக்கப்பட்டு வருகிறது. இதை நடத்துவதற்கான பெரும்பாலான சபைகளில் 10 ம் 12 ம் மற்றும் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் இதைப் பொறுப்பேற்று நடத்தும்ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகையாக மாதம் ரூ. 200 கொடுக்கப்படுகிறது.

- ☞ 400 கிராமத்தில் நடத்தப்படும் ஓய்வு நாள் பாடசாலை மூலமாக பல்லாயிரம் குழந்தைகள் இயேசுவை அறிந்து நிலைத்து நிற்க ஜெபியுங்கள்.
- ☞ ஆசிரியர்களுக்கான ஊக்கத் தொகை மற்றும் பயிற்சிப் புத்தகங்கள், பயிற்சி கொடுக்கத் தேவையான நிதியுதவி ரூ. 1,20,000 கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

## V.B.S. (C.B.C) சிறுவர் வேதாகமப் பள்ளி

தேவ கிருபையால் ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் 10 நாட்கள் சுமார் 30,000 சிறுவர்களின் ஆசீர்வாதத்திற்காக சிறுவர் வேதாகமப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் தலைப்பில் பாடல்கள், புத்தகங்கள் உருவாக்கப்பட்டு சுமார் 1000 பேர்களுக்கு C.B.C பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. இதன் விளைவாக கிறிஸ்துவை அறியாத நூற்றுக்கணக்கான சிறுவர்கள் தேவனை ஏற்றுக் கொண்டு வருகிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் நடைபெறும் இந்த பணிகள் ஆசீர்வதிக்கப்படவும் மற்றும் தேவையான நிதி ரூ. 6 லட்சம் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

## ஷாலோம் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாம் 2013

தேவனுக்கு சித்தமானால் நவம்பர் மாதம் 18, 19, 20, 21 தேதிகளில் குஜராத்தில் ஆனந்த் பட்டணத்தில் நடைபெற உள்ள ஷாலோம் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாமின் ஆயத்தங்களுக்காகவும், தேவ செய்தி அளிக்கும் தாசர்களுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள்.

## ஷாலோம் மிஷன் ஞாயிறு

ஒவ்வொரு வருடமும் ஷாலோம் ஊழியங்களை ஆரம்பிக்க தேவன் கொடுத்த நாளை நினைவு கூர்ந்து 3 மாநிலங்களின் அனைத்து சபைகளிலும் ஷாலோம் மிஷன் ஞாயிறு ஆசரிக்கப்படுகிறது. அந்த நாள் ஆராதனையில் தேவன் தந்த திருச்சபைகளுக்காக தேவனை துதித்து முழு பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்திற்காக தேவன் எங்களுக்குத் தந்த பரம தரிசனத்தை நிறைவேற்ற விசுவாசிகள் யாவரும் சபையாக ஜெபிக்கவும், ஆத்தும ஆதாயம் செய்ய தங்களை அர்ப்பணிப்பது மட்டுமல்லாமல் தங்கள் ஏழ்மையில் இருந்து தேவனுக்காகவும் மிஷெனரி பணிக்கென காணிக்கைகளை சபைகள்தோறும் சேகரித்து அனுப்புவார்கள். கடந்த ஆண்டில் தேவக்கிருபையால் சுமார் ரூ. 20,00000 இலட்சங்கள் வரை கொடுத்தார்கள். வரும் அக்டோபர் 6 , 13, 20 ஆகிய தேதிகளில் முறையாக மத்தியப்பிரதேசம், குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள சபைகளில் நடைபெறவிருக்கும் **ஷாமலாம் மிஷன் ஞாயிறு** ஆராதனைக்காக தேவனின் அபரிமிதமான ஆசீர்வாதங்களுக்காக ஜெபியுங்கள்.

## ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை

தேவ கிருபையால் 15.07.2013 அன்று ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய மருத்துவமனையை தேவன் ஆசீர்வதித்து வருகிறார். ஒவ்வொரு நாளும் உடலிலும், உள்ளத்திலும் தேவையுள்ள ஜனங்கள் வந்து நல்ல சிகிச்சைகளையும், ஆலோசனைகளையும் பெற்று வருகிறார்கள். மருத்துவப் பணிகளைப் பொறுப்பேற்று நடத்தும் **டாக்டர். இன்பக்குமார்** அவர்களுக்காவும் ஒருங்கிணைந்து செயல் படும் **சகோ. வாலஸ்பாய்** அவர்களுக்காக இவரது மருத்துவப் பணிகளுக்காக ஜெபியுங்கள். மருத்துவப் பணிகளுக்கான சில உபகரணங்கள் வாங்கப்படவும், மருந்து வகைகள் வாங்கப்படவும், மாதாந்திர தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். இம்மாதம் அவசர தேவையான ரூ. 5 லட்சம் கிடைக்கப் பெற ஜெபியுங்கள்.

## ஷாலோம் திருச்சபையின் வளர்ச்சிப்பணி

தேவன் தந்த பீல் சுதேச ஊழியர்கள் 500 பேர்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவர் பலத்த கிரியைகளை நடப்பித்தார். **என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். (யோவான்: 14:12)** என்ற வசனத்தின்படி பரிசுத்த ஆவியானவர் இவர்களைக் கொண்டு பலத்த அற்புத அடையாளங்களினால் நூற்றுக்கணக்கான குடும்பங்களில் 3 மாநிலங்களில் ஒவ்வொரு பிராந்தியத்தில் உள்ளவர்களை இரட்சித்தார். இவர்கள் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டார்கள். ஒவ்வொரு கிராம சபைகளிலும் 25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக் கொண்டவுடன் சுதேச ஊழியர் ஆலயம் கட்டுவதற்காகக் கொடுக்கும் தனது சொந்த நிலத்தில் கிராம ஆலயங்கள் கட்டப்படுகிறது. இதுவரை தேவக்கிருபையால் எழுப்பப்பட்ட 650 கிராம சபைகளில் 260 கிராம சபைகள் 40க்கு 20 மற்றும் 50க்கு 20 என்ற அளவில் ஆலயங்கள் கட்டப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் இன்னும் 30 இடங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் 70 கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்படவும் தேவன் திறந்த வாசலை தந்திருக்கிறார். இதற்காக ரூ. 200000 மற்றும் 300000 நிதியுதவி கொடுத்து ஆலயங்களைக் கட்டிக் கொடுக்கும் சபைகள் மற்றும் தேவ ஜனங்கள் எழுப்பப்பட ஜெபியுங்கள். ஷாலோம் திருச்சபைகளின் திருமண்டலத்திற்காகவும் வளர்ச்சி மற்றும் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபியுங்கள்.

தேவக்கிருபையால் 20.11.2010 அன்று பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி மற்ற திருச்சபைகளின் ஐக்கியத்தோடு இணைக்கப்படாமல், நம்முடைய அனைத்து ஷாலோம் சபைகளும் இணைக்கப்பட்டு ஷாலோம் திருமண்டலமாக உருவாக்கப்பட்டு, அடியேனை முதல் பேராயராகவும், மற்றும் 77 மூத்த சுதேச ஊழியர்கள், போதகர்களாகவும் அர்ப்பணிக்கப்பட்டு அபிஷேகம் பெற்றார்கள்.

- ☞ ஷாலோம் திருச்சபைகள் தேவனுடைய பரிசுத்தத்தில் வளர தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்க,
- ☞ ஷாலோம் சபைகள் வரங்களினாலும், கனிகளினாலும் நிரப்பப்பட்டு உலகெங்கும் சுவிசேஷம் அறிவிக்கும் திருச்சபையாக விளங்க,
- ☞ அனைத்து ஷாலோம் திருச்சபைகளுக்காகவும் சொந்த பீல் ஜனங்கள் அனைவரும் நம் தலைமுறையிலேயே இரட்சிக்கப்படவும் நம் பாரத தேசம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிக்கும் திருச்சபைகளாக விளங்கவும்,
- ☞ ஷாலோம் திருச்சபை விசுவாசிகள் தேவனை நேசிக்கவும், தசமபாகத்திற்கும் அதிகமாய் கொடுக்கும் திருச்சபைகளாக விளங்கவும்,
- ☞ இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சேர்க்கும் திருச்சபைகளாக விளங்கவும்,
- ☞ வருடந்தோறும் புதிய கிளை சபைகளை உருவாக்கி தேவனுடைய இராஜ்ஜியத்தை கட்டும் திருச்சபைகளாக விளங்கவும்,
- ☞ கிறிஸ்துவின் வருகையில் ஆயத்தமாக்கப்பட்ட மணவாட்டியின் சபையாக விளங்கவும், ஜெபியுங்கள்.

**கல்விப்பணி**

தேவன் நமக்குத் தந்த பல்லாயிரம் விசுவாசி மாணவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். அவர்களில் குறைந்ததது 10 ஆயிரம் மாணவர்களுக்கு குறைந்த கல்வி நிதியைக் கொடுக்கவும் அதற்காக உதவிகளைச் செய்யவும் தேவன் ஷாலோம் Charity Mission என்ற பிரிவைக் கொடுத்திருக்கிறார். இதன் மூலமாக சுமார் 970 மாணவர்கள் பள்ளி கல்லூரிகளில் படித்து ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக இராஜஸ்தானில் நமது பிஜல்பூர் ஷாலோம் பள்ளி மற்றும் விடுதி மற்றும் கொய்க்கா ஹரிநகர் ம.பி, பகுதியிலுள்ள ஷாலோம் விடுதி, கட்வாடா பகுதிகளிலுள்ள விடுதிக்காக ஜெபியுங்கள்.

வரும் காலங்களில் மூன்று மாநிலங்களிலும் பள்ளி, கல்லூரிகள் எழுப்பப்பட்டு முழு பீல் மக்களும் கல்வி அறிவினால் நிரப்பப்பட ஜெபியுங்கள். Compassion Project மூலமாக குஜராத்தில் ஹிரோலா, ஜெரி மற்றும் மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியாவில் நடைபெறும் Children's Project சிறுவர்கள் கல்விப் பராமரிப்புத் திட்டம், கர்ப்பிணிப் பெண்களுக்கான Project பராமரிப்புத் திட்டத்தின் மூலமாக 750 மாணவர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

☞ மாதந்தோறும் ரூ. 600 கொடுத்து பீல் மாணவர்களைத் தாங்கக்கூடிய ஆதரவாளர்கள் 300 பேர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

☞ பீல் மக்களின் சிறிய தலைமுறை கிறிஸ்துவுக்காக எழும்பி பிரகாசிக்கவும் திருச்சபைக்கும் தேசத்திற்கும் ஆசீர்வாதமாக விளங்க ஜெபியுங்கள்.

**வயல் வெளிகளில் ஆசீர்வாதம்**

தேவ கிருபையால் தேவன் நமக்களித்த நம் பீல் மக்களுக்கு நல்ல மழையை கட்டளையிட்டு உள்ளார். தொடர்ந்து தேவையான மழையை தேவன் தரவும், விவசாயம் செழித்து நல்ல அறுவடையை விசுவாசிகள் பெற ஜெபியுங்கள். விசுவாசிகள் அனைவரும் விளைச்சலின் பலனை தசமபாகமாக தேவனுக்காக செலுத்த ஜெபியுங்கள்.

**ஷாலோம் சபை மூப்பர்கள்**

தேவக்கிருபையினால் ஒவ்வொரு கிராம சபைகளில் 7, 7 மூப்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு சிறப்பான பயிற்சி அளிக்கப்பட்டு ஆவிக்குரிய தலைவர்களாக விளங்கி வருகிறார்கள். இப்படிப்பட்ட மூப்பர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்ட தேவ சபையை ஆத்துமப் பாரத்தோடு கண்காணிக்க ஜெபியுங்கள்.

☞ சபை பராமரிப்பு பணியிலும் திருச்சபை வளர்ச்சிப்பணியிலும் போதகர்களோடு இணைந்து தேவன் தந்த பரமதரிசனத்தை நிறைவேற்ற ஜெபியுங்கள்.

☞ வருடந்தோறும் இரண்டு முறை இவர்களுக்காக நடத்தப்படும் மூப்பர்கள் முகாம்கள் மூலமாக தேவன் இவர்களை வல்லமையாய் பயன்படுத்த ஜெபியுங்கள்.

☞ 12 இடங்களில் நடத்தப்படும் மூப்பர்கள் கூட்டத்திற்கு தேவையான நிதி ரூ.100000 கிடைக்கப்பெற ஜெபிக்கவும்.

## ஷாலோம் அற்புதத்தின் நாள்

கடந்த 10 வருடங்களாக செப்டம்பர் மாதம் 4 வது வெள்ளிக்கிழமை அன்று ஷாலோம் அற்புத நாளாக ஜெபக்கூடுகை 3 மாநிலங்களில் உள்ள அனைத்து சபைகளிலும் ஏறெடுக்கப்படுகிறது. நாங்கள் குடும்பமாக ஊழியர்களுடன் மற்றும் மூப்பர்களோடு ஜெப எண்ணெயை ஜெபித்து அனைத்து சபைகளிலும் எண்ணெய் பூசி வியாதியஸ்தர்கள், பிசாசின் பிடியில் இருப்பவர்கள் பாவக் கட்டுகளில் இருப்பவர்கள் போன்றவர்களுக்காக விசேஷித்த ஜெபங்களை ஏறெடுப்போம். ஒவ்வொரு சபைகளிலும் விசுவாசிகள் மூப்பர்கள் உபவாசித்து ஜெபித்து புதிய ஆத்துமாக்களையும் தேவையுள்ள ஜனங்களையும் அழைத்து வருவார்கள். ஒவ்வொரு வருடமும் அனைத்து சபைகளிலும் சுமார் 4000க்கும் மேலான அற்புதங்கள் நடைபெறும். பல நூறு புதிய குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெறுவார்கள். அன்று மாபெரும் சந்தோஷம் உண்டாகும். ஆகவே 27.9.2013 வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள விசேஷித்த **ஷாலோம் அற்புதத்தின் நாளின்** ஆசீர்வாதத்திற்காகவும், ஆயத்த பணிகளுக்காகவும் ஜெபிக்கவும்.

## பணித்தள ஊழிய தேவைகள்

மேற்கண்ட காரியங்கள் மட்டுமல்லாமல் அனைத்து ஊழியங்களைம் கண்காணித்து, பராமரித்து, இன்னும் சிறந்த முறையில் நிறைவேற்றி பணித்தள அலுவலகத்தில் நிர்வாக பொறுப்பாளர்களை ஒவ்வொரு துறையிலும் அமைத்து செயல்பட வேண்டும். இதுவரை 30 ஊழியர்கள் பணித்தள அலுவலக மற்றும் பயிற்சி துறையிலும், 70 ஊழியர்கள் மற்ற Projects, School, Hostel பொறுப்பிலும் உள்ளார்கள். இவைகளை நடத்திச் செல்வது மட்டுமல்லாமல் ஊழியப்பாதையில் 25–ஆம் ஆண்டான 2016–ஆம் ஆண்டிற்குள் **1000 சுதேச ஊழியர்களும், 1000 சபைகளும் எழுப்பப்பட்டு, 3000 கிராமங்கள்** சந்திக்கப்பட வேண்டும். 2020ம் ஆண்டிற்குள் 10 இலட்ச ஆத்துமாக்களை கிறிஸ்துவண்டை வழிநடத்தவேண்டும் என்ற தூர தரிசன திட்டங்கள் நிறைவேற்றப்பட உங்கள் ஜெபங்கள் மற்றும் உற்சாகமான காணிக்கைகளை இன்னும் எதிர்பார்க்கிறோம்.

குறிப்பாக மாதந்தோறும் அனைத்து பணித்தள திட்டங்களை நிறைவேற்றவும், அலுவலக திட்டங்கள் நிர்வாக பணிக்கான ரூ.5 இலட்சங்கள் தேவைப்படுகிறது.

★ மாதந்தோறும் ரூ.500 கொடுத்து ஜெபித்து தாங்கும் ஷாலோம் ஊழிய பங்காளர்கள் எழும்ப ஜெபியுங்கள்.

★ இம்மாபெரும் தரிசனப்பணியை குறைந்தது 5 பேர்களுக்கு குறிப்பாக உங்கள் பிள்ளைகள், உறவினர், சபையார், நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.

★ நீங்கள் இருக்கும் இடத்தில் ஷாலோம் ஊழியத்திற்கு "பிரதிநிதியாக" பொறுபேற்று ஊழிய அறிமுகம் செய்து காணிக்கை சேகரித்து அனுப்ப முன்வாருங்கள்.

நம் தலைமுறையில் பீல் ஆதிவாசி ஜனங்கள் அனைவரும் இயேசுவை அறியவேண்டும்.

*தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!*

## மிஷனெரி சாட்சி

கர்த்தருடைய மாபெரும் தயவால், கடந்த **11.8.2013** அன்று தூத்துக்குடியிலுள்ள **புதுவாழ்வு கிறிஸ்தவ விசுவாச ஜெனரல் அசெம்பிளி** சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்களின் மிஷனெரி சாட்சியும் ஊழியப்பகிர்வும் நடைபெற்றது. ஷாலோம் ஊழியங்களைக் குறித்து நம் தலைமை அலுவலக ஊழியர் **சகோ. S. ஜெயபிரகாஷ்** அவர்கள் விளக்கிக் கூறினார்கள். இதில் பங்குபெற்ற 7 ஊழியர்களில் 2 பேர்கள் தங்கள் சாட்சிகளைக் கூற, **சகோ. சாமுவேல்** அவர்கள் தமிழாக்கம் செய்தார்கள். இந்த வாய்ப்பளித்த சபைப்போதகர் **S. D. பால் ஆண்ட்ரூஸ் கனகராஜ்** அவர்களுக்கு ஷாலோம் சார்பாக நன்றி கூறுகிறோம்.

## ஊழியப் பகிர்வு

தேவ நாமம் மகிமைப்படுவதாக கடந்த **11.8.2013** ஞாயிறு காலை **8.30** மணிக்கு, கைலாசபுரம் **CSI பரி. திரித்துவ தேவாலயத்தில்** நடந்த ஆராதனையில் பாடல் வேளையை நம் தலைமை அலுவலக ஊழியர்கள் **சகோ. ரதீஸ், சகோ. ஆலன் எல்விஸ்,** போன்றோர்கள் நடத்தினார்கள். **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் **Christian Life Style** என்ற தலைப்பில் தேவ செய்தியளித்தார்கள். நம் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். இந்த வாய்ப்பை அளித்த சபைக் குருவானவர் **Rev. மர்காஷியஸ் W. டேவிட்** அவர்களை தேவன் ஆசீர்வதிப்பாராக.

## உபவாச ஜெபக்கூடுகை

தேவ நாமம் மகிமைப்படுவதாக! கடந்த **17.08.2013** அன்று ராணிப்பேட்டை **C.S.I. புனித மேரி** தேவாலயத்தில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் பாடல் வேளை மற்றும் ஆராதனை வேளையை, நமது ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்கள் **சகோ. ரதீஸ்** அவர்கள் நடத்த, **சகோ. சுந்தர்சிங்** அவர்கள் இசையமைத்தார்கள். **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் நமது ஊழியங்களைக் குறித்து விளக்கிக் கூறினார்கள். **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். இதற்கு வாய்ப்பளித்த ஆலய போதகர் **Rev. கருணாகரன் சஞ்சீவி** அவர்களுக்கும், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த **சகோ. வால்டர் சுந்தர்சிங்** அவர்களுக்கும் தேவ நாமத்தில் ஷாலோம் ஊழியத்தின் சார்பில் நன்றிகளைக் கூறுகிறோம்.

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

நாள் : *14.09.2013, சனிக்கிழமை*

நேரம் : *மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை*

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,
தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை
## 11.08.2013 (புத்தளம்)



பிரதிஷ்டை ஜெப வேளை



மிஷனெரி சகோ. யாகூப் T. பார்கி அவர்களும் தாங்கும் சபையாரும்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! கடந்த 11.08.2013 ஞாயிறு அன்று, கன்னியாகுமரி மாவட்டம் புத்தளம், பெத்தேல் லூத்தரன் ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் நமது, ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. யாகூப் T. பார்கி அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இந்த ஆராதனையில் நமது ஷாலோம் பேராயர் V. தேவதாஸ் அவர்கள் சுதேச ஊழியரின் சாட்சியினை மொழியாக்கம் செய்து, நமது ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டு, தேவ செய்தியளித்தார்கள்.

நமது ஷாலோம் ஊழியங்களை அன்போடு ஏற்றுக் கொண்டு ஊழியரைத் தாங்கி பிரதிஷ்டைசெய்யும்படி வாய்ப்பளித்த, சபைப் போதகர் Rev. P.D. அலெக்ஸாண்டர் அவர்களுக்காகவும், சபை அங்கத்தினர்கள் மற்றும் ஊழியரைத் தாங்கும் சகோ. ஜெகன் அவர்கள் குடும்பத்தாருக்காகவும், தேவனைத் துதித்து நன்றிகளை ஷாலோம் ஊழியத்தின் சார்பில் தெரிவிக்கிறோம்.



## 10 இலட்ச ஆத்துமாக்கள் அறுவடைத் திட்டம்
## சுகமளிக்கும் கூட்டங்களில் நடைபெற்ற அற்புத சாட்சி

பெயர் : **காளி பேன்** வயது : 42

கிராமம் : சிமல்பாடா, மத்தியப்பிரதேசம்,

எனது 40–வது வயதில் அதிக வியாதிப்பட்டு கூனியாகி விட்டேன். சுமார் ரூ. 60,000 க்கும் அதிகமாக செலவு செய்து, மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. பின்பு சிமல்பாடா கிராமத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்று இயேசுவை விசுவாசித்து ஜெபித்த போது தேவன் எனக்கு பூரண விடுதலையைக் கட்டளையிட்டார்.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு நான் நிமிர்ந்து நிற்கவும் நடக்கவும் பலன் கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு

## வேதம் வழங்குவோம் வாருங்கள்




இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வரும் இவர்கள் இப்போது எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த ஆண்டுகளில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக அநேக ஆயிரம் வேதப்புத்தகங்கள் ரூ. 150/–க்கு வாங்கி, அவற்றை வறுமையில் வாடும் பீல் ஆதிவாசி ஏழை விசுவாசிகளுக்கு மிகக் குறைந்த விலையாக ரூ. 50/–க்கு கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் "சிறப்பு விருது" கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளதால் தேவனைத் துதிக்கிறோம்!

உங்களில் பலர் கடந்த ஆண்டில் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அனுப்பினீர்கள். இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

மேலும் இந்த 2013ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக 7 ஆயிரம் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத் மற்றும் ஹிந்தி வேதாகமங்கள் கொடுக்கும்படியாக தேவன் பாரத்தினைக் கொடுத்துள்ளார். அதற்காக 7000 (ஹிந்தி – 5000 & குஜராத்தி – 2000) வேதாகமங்கள் தேவைப்படுகின்றன. ரூ. 100/– வீதம் 7000 வேதாகமங்களுக்கு, நிதி உதவியாக ரூ. 7,00,000/– கிடைக்கும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாம். நீங்கள் வாங்கிக் கொடுக்கும் ஒவ்வொரு வேதப் புத்தகமும் ஒரு ஆதிவாசியின் வாழ்க்கையில் மிகப் பெரிய ஒளி விளக்காய் அமையும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவ திட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.** சங்கீதம். 119 : 105



## திருமண வாழ்த்து (12.08.2013)

### சகோ. ஃபிராங்கிளின் பென்னட் - ஹேனா பிரைட்லின்


மணமக்கள் ஃபிராங்கிளின் – ஹேனா


போதகர்கள் மற்றும் பிஷப்புடன் மணமக்கள்



மணமக்களுக்கான தேவ செய்தியளிக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள்



பிஷப் தேவதாஸ் அவர்கள் குடும்பத்துடன் மணமக்கள்

தேவகிருபையால் நம் ஷாலோம் ஊழிய பணித்தளத்தில் 3 மாநிலங்களில் நடைபெறும் ஊழித்திற்கு, பாடல்கள் பாடி, இசைக்கருவிகளை மீட்டு, ஆராதனை நடத்தி, தேவ பிரசன்னத்தில் வழி நடத்தும் கிருபை பெற்றவர் சகோ. ஃபிராங்கிளின் பென்னட். தேவன் அவர்களை கடந்த 5 வருடங்களாக ஆராதனை மட்டுமல்ல சிறுவர் ஊழியங்கள், வாலிபர் ஊழியங்களைப் பொறுப்பேற்று நடத்தவும், சுமார் 90 ஹிந்திப் பாடல்களை இயற்றி இசையமைத்து ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக வைத்துள்ளார்.


தேவனின் அநாதித் தீர்மானத்தின்படி குளத்துக்குடியிருப்பு (தூத்துக்குடி) இயேசுவே மீட்பர் அன்பு சகோ. குரூஸ் மாசில்லாமணி – சகோதரி. பியூலா (சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களின் சகோதரி) அவர்களின் மூத்த மகள், ஹேனா பிரைட்லின் உடன் 12.8.2013 அன்று குளத்துக்குடியிருப்பு CSI ஆலயத்தில் தேவ நாமம் மகிமைப்பட திருமணம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நடைபெற்றவரவேற்பு வைபவத்தில் அன்பு சகோ. மோகன். சி. லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார் நாலுமாவடி) அவர்கள் தேவ செய்தியையும், வாழ்த்துதலையும் வழங்கினார்கள். சகோதரி. ஹேனா பிரைட்லின் மீடியா துறையில் படித்து பயிற்சிபெற்றவள். இருவரும் இணைந்து ஷாலோம் ஊழியத்திற்கு மேலும் ஆசீர்வாதமாக அமைவார்கள் என்று தேவனை துதிக்கிறேன். இவர்கள் இல்லறவாழ்விற்காகவும், ஊழியப் பாதையில் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தவும் ஆசீர்வதித்து ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# திரு. ரெஜினால்ட் சாலமோன் - திருமதி. சாந்தா சாலமோன் அவர்களின்

# பணித்தள வருகை



கங்கேலா, குஜராத் கிராம சபையில் கலாசச்சார வரவேற்பு



கங்கேலா, குஜராத் கிராம சபையில் செய்தியளிக்கும், சகோ. ரெஜினால்ட் சாலமோன்



பாட்டன்புரா, குஜராத் கிராம சபையில் சாட்சி பகிர்வு - சகோ. சாலமோன்



வில் அம்பு மற்றும் கவண்களுடன்



தெல்சர், குஜராத் கிராம சபையில் அறிமுக வேளை



தெல்சர், குஜராத் கிராம சபையில் கூடியிருந்த விசுவாசிகள்



அந்தர்வேலியா, ம.பி கிராமத்தில் ஆடுகள் வழங்குதல்



வரம்கேடா, குஜராத் கிராம சபையில் செய்திவேளை - சகோதரி. சாந்தா சாலமோன்

# தேவை நிறைந்த பணித்தளத்தில் மறக்க முடியாத எங்கள் அனுபவங்கள்

*சகோ. ரெஜினால்டு சாலமோன் & சகோதரி. சாந்தா சாலமோன்*
*(Rtd. Deputy General Manager, Commercial, Godrej & Boyce Mfg Co.Ltd,Bangalore)* *(Principal, Bishop Cotton Women's College, Bangalore)*

**சகோ. ரெஜினால்டு சாலமோன் & சகோதரி சாந்தா சாலமோன்** ஆகிய நாங்கள் இருவரும் நமது ஷாலோம் பணித்தளத்தில் 15.07.2013 அன்று ஆரம்பிக்கப்பட்ட **ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை** திறப்புவிழா வைபவத்திற்கு குடும்பமாகச் செல்ல தேவன் கிருபை செய்தார். அந்த மருத்துவமனையை எனது மனைவி சாந்தாவின் உடன் பிறந்த சகோதரரான **Dr. இன்பக்குமார்** ஜோசப் அவர்கள் பொறுப்பேற்று நடத்துகிறார்கள். வேலூர், CMC – ரூஷா பிரிவில் சுமார் 30 வருடங்கள் பணியாற்றிய சிறந்த மருத்துவரான அவர் கடந்த ஏப்ரல் மாதம் ஓய்வு பெற்றபின்பு அநேக மருத்துவமனைகளிலிருந்து அதிகமான சம்பளம் மற்றும் வசதிகளுடன் பணி செய்ய வாய்புகள் தேடிவ வந்தபோதும், தான் 8 வருடங்களாக குஜராத்திலுள்ள பீல் ஆதிவாசி மக்கள் வாழும் ஷாலோம் பணித்தளங்களில் மருத்துவ முகாம்கள் மூலமாக நிறைவேற்றிய மருத்துவப் பணிகளின் நீங்காத நினைவுகளால், கிறிஸ்துவின் அன்பினால் நிரப்பப்பட்டவராய் பீல் மக்களின் மேல் ஆத்தும பாரத்தோடு ஷாலோம் ஊழியதில் தன்னை மருத்துவப் பணிக்காக ஒப்புக் கொடுத்தார்.

எங்களிடமும் பல முறை ஷாலோம் பணித்தளங்களை வந்து பாருங்கள் என்று கூறியிருக்கிறார்கள். நாங்கள் ஜுலை 13ம் தேதி அகமதாபாத் வந்தடைந்து, அங்கிருந்து அன்றிரவிலே தாகோத் வந்து சேர்ந்தோம். தாகோத் வந்ததும் ஷாலோம் திருமண்டல பேராயர் வே. தேவதாஸ் அவர்கள் குடும்பமாக எங்களை வரவேற்று உபசரித்தார்கள். அதன்பின் 22 வருடங்களாக பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் ஊழியத்தை நிறைவேற்றியதைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். திருடர்களாக, குடிகாரர்களாக, கொலை காரர்களாக, பிசாசின் பிடியில் வாழ்ந்த பீல் ஆதிவாசி ஜனங்கள், சுவிசேஷத்திற்கு செவி சாய்த்து ஆயிரக்கணக்கானோர் தேவனை ஏற்றுக் கொண்ட காரியத்தை விளக்கினார்கள். இன்னும் சில பகுதிகளில் இரவு 7.00 மணிக்குமேல் வாகனங்களின் வெளிச்சத்தின் உதவியுடனும் போலீஸ் காவலுடனும் ஜனங்கள் அவர்கள் வசிக்கும் இடங்களுக்குச் செல்வதைக் காணலாம். இன்று அதே பீல் மக்களிடமிருந்து சுமார் 500க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களை எழுப்பி பயிற்சிக் கொடுத்து உருவாக்கி அவர்கள் மூலமாக சுமார் 600க்கும் அதிகமான சபைகள் உருவாக்கப்பட்டிருப்பது தேவ கிருபையாகும்.

அடுத்தநாள் 14ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று **சகோ. சாமுவேல்** அவர்கள் எங்களை பணித்தளங்களைப் பார்வையிடும்படியாகவும், ஆலய ஆராதனைகளில் பங்குபெறும்படியாகவும் இதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்து வாகனத்தில் அழைத்துச் சென்றார். நாங்கள் தெல்சர், வரம்கேடா–1, வரம்கேடா–2, பாட்டன்பூரா, கங்கேலா ஆகிய கிராம ஆலயங்களுக்குச் செல்ல தேவன் கிருபை தந்தார். மதிய உணவிற்குப்பின் குஜராத்திலிருந்து 40 கி.மீ. தூரத்திலுள்ள அந்தர்வேலியா, மேந்திகேடா, காளாகேத், நவாபாடா மற்றும் ரூபாகேடா ஆலயங்களைப் பார்வையிட்டோம்.

10 கிராம ஆலயங்களைப் பார்த்தபோது எங்கள் இருதயம் மகிழ்ச்சிக் கொண்டது. சுமார் 5 மணி நேரங்கள் ஆலய ஆராதனைகளில் பாடி துதித்து, அந்நிய பாஷையில் ஆராதிப்பது எங்களை மேலும் உற்சாகப்படுத்தியது மட்டுமல்லாமல், எங்களுடைய ஆவிக்குரிய கண்களையும் திறந்தது. நாங்கள் கங்கேலா கிராமத்திலும் மற்றும் சில சபைகளிலும் செய்தி கொடுக்கவும், எங்களுடைய வாழ்த்துச் செய்தி மற்றும் சாட்சிகளைப் பாகிர்ந்து கொள்ளவும் தேவன் கிருபை செய்தார். இந்த பணித்தளங்களில் சுமார் 100 கி.மீ. அளவில் பல கிராமங்களில் போக்குவரத்து, சாலை வசதிகள், மருத்துவமனைகள் மின்சாரம், பள்ளிக்கூடங்கள் போன்றவைகள் கிடையாது. அங்கும் இங்குமாக தங்கள் நிலத்தில் வீடுகளைக் கட்டி ஜனங்கள் வாழ்ந்து வந்தாலும், இயேசு கிறிஸ்துவை நேசித்து பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்று, நம் பகுதியில் இருப்பதைப் போல விதவிதமான இசைக் கருவிகளோ, பாடல் குழுவினரோ ஒலி பெருக்கிக் கருவிகளோ இல்லாத போதும் தங்கள் கிராமிய இசையில் பாடல்களைப் பாடி இயேசுவின் நாமத்தைத் துதித்து அல்லேலூயா கீதங்களைப் பாடுவதைக் கண்டபோது சந்தோஷமாயிருந்தது.

ஆங்காங்கே உள்ள சுதேச ஊழியர்கள் வசிக்கும் பகுதிகளில், அவர்களது சொந்த இடங்களிலேயே சுமார் 260க்கும் அதிகமான ஆலயங்கள் கட்டப்பட்டு விசுவாசிகள் ஆராதிப்பது எத்தனை பேரானந்தம். இன்னும் 200 கிராம ஆலயங்கள் கட்டுவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றும் வருகிறது. பீல் ஆதிவாசி விசுவாசிகள் மிகவும், எளிமையுள்ள ஏழைகளும் பல கிராமங்களில் குடிப்பதற்கு சரியான தண்ணீர், உணவு கூட கிடைக்கப் பெறாமல், நாம் அனுபவிக்கும் பல நவீன வசதிகள் அல்ல, அடிப்படை வசதிகள் கூட கிடைக்கப்பெறாதவர்கள். ஆனால் இவர்கள் இயேசு கிறிஸ்துவை நேசித்து, பரிசுத்த ஆவியில் நிறைந்து பாடும் பாடல்கள், நடத்தும் ஆராதனை ஆகியவற்றைப் பார்க்கும்போது எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

பீல் மக்களையும் அவர்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களையும் பார்க்கும்போது, **பேராயர். தேவதாஸ்** அவர்களின் குடும்பம் தேவ தரிசனத்தை ஷாலோம் ஊழியத்தின் மூலமாக பீல் மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து, சீஷர்களை உருவாக்கி, திருச்சபைகளைக் கட்டி எழுப்பி, இயேசு கிறிஸ்துவின் அன்புக் கட்டளைகளை நிறைவேற்றி வருகிறார்கள்.

15.07.2013 அன்று குஜராத் தாகோத் பணித்தளத்தில் **ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனையை** டாக்டர் இன்பக்குமார் அவர்கள் தலைமையில் அனைத்து தேவ ஜனங்களும் இணைந்து ஜெபத்துடன் துவக்கி வைத்தார்கள்.

அன்பானவர்களே, தேவன் தந்த இந்த நல்ல கிருபைகளுக்குகாக அவரைத் துதிக்கிறோம். ஷாலோம் ஊழியங்கள் மேலும் பயனுள்ள மேம்பாட்டுத் திட்டங்களை பீல் மக்களின் நல்வாழ்வுக்கு செயல்படுத்த தேவன் தாமே கிருபை செய்வாராக! ஆமென். நகரங்களில் நாம் நவீன வசதிகளான டீ.வி., தொலைபேசி, அலைபேசி, ஐ–பேடு, ஐ–போன், நவீன கார் வசதிகள், ஏர்கன்டிசன் போன்றவற்றை வீட்டிலும் அலுவலகத்திலும் பயன்படுத்தி சொகுசான வாழ்க்கை வாழ்ந்து வருகிறோம். உடலிலும், உள்ளத்திலும், ஆன்மாவிலும் தேவைகள் நிறைந்த பீல் மக்களின் பணித்தளங்களை உங்களுக்குக் கிடைக்கும் விடுமுறை நாட்களில் வந்து, எளிமையான விசுவாசிகளையும் அவர்களின் உன்னதமான ஆராதனைகளயைும் என்றும் மனதில் நிற்கும்படி அவர்கள் வெளிப்படுத்தும் கிறிஸ்துவின் அன்பையும், ஷாலோம் பணித்தளத்திற்கு வந்து பார்வையிட்டு, ஜெபித்து இந்த ஊழியத்தை மனதார தாங்க முன்வாருங்கள்.

# ஷாலோம் கிளை அலுவலகங்கள்...

## திருநெல்வேலி

**Sharing Love Mission**

56A/4, (Upstairs ) STC Road, C.S.I.Church South Street,

Perumalpuram, Tirunelveli - 627007,

**சகோ.** R. **டேவிட்** Cell : 9344475468

## மார்த்தாண்டம்

**Sharing Love Mission**

**M.T.N.** பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)

வடக்குத் தெரு, மார்த்தாண்டம்.

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை, Cell : 94876-89869,**

## சென்னை

**Sharing Love Mission**

**No. 102/II** மெயின் ரோடு, சத்யா நகர், பாடி, சென்னை – 600 050

தொடர்புக்கு: **சகோ. R. கார்த்திகேயன்**

**Ph. : 044 : 3192246, Cell : 8144275468**

*ஜெபியுங்கள்!* *பங்கு பெறுங்கள்!*

### வாக்குத்தத்த ஆசீர்வாத ஜெபக் கூடுகை

நாள் : **02.09.2013 (திங்கள்)**

நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை**

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

### `ôúXôm 24 U¦ úSW Ne¡-j ùRôPo ù_Tm



நாள் : **21.09.2013 (சனிக்கிழமை)**

நேரம் : **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 11.59 மணி வரை (24 மணிநேரம்)**

*நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.*

# பணித்தளங்களில் தேவ அற்புதங்கள் !

## குஜராத் மாநிலம்

**Pr. தினேஷ் K. நினாமா** **காளிமாகுடி**

சாத்தானின் பிடியில் அவதிப்பட்டு வந்த ஈசுபாய் என்பவருக்காக ஜெபித்தபோது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. கோர்சிங் R. டாமோர்** **புரக்குவா**

ரமேஷ் பாய் என்பவருக்கு நரம்பில் பெலவீனம் ஏற்பட்டு 2 மாதங்களாக கஷ்டப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை செய்தும் குணமடையாமல் நம் ஊழியரிடம் ஜெபித்த போது தேவன் சுகம் தந்தார்.

ஹத்லிபேன் என்ற சகோதரிக்கு ஜெபித்தபோது நீங்காத இடுப்புவலி தேவக் கிருபையினால் நீங்கியது.

பல மாதங்களாக கை கால் வேதனையினால் அவதிப்பட்டு வந்த ஹுவர் பேனுக்காக ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. சேவ்சிங் V. தாமார்** **குர்வாணி**

தலிபேன், விக்ரம்பாய் போன்றவர்கள் இரண்டு வருடங்களாக சாத்தானின் பிடியில் பல்வேறு சிரமப்பட்டு வந்தனர். நம் ஊழியரிடம் ஜெபிக்கவே, அற்புத விடுதலை கிடைத்தது.

**Pr. நாவல்சிங் N. பாரியா** **வரம்கேடா**

சரீர வேதனையில் அவதிப்பட்டுவந்த காந்தாபேன் என்பவர் நமது ஊழியரிடம் ஜெபிக்கவே தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

சவிதா பேனுக்கு தலைவலி மற்றும் வயிறுவலியிலிருந்து தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

**Pr. பட்சு பபேரியா** **ராசரடா**

சாத்தானின் பிடியிலிருந்து ராதா பேனுக்கு பூரண விடுதலை கிடைத்தது.

மங்களா பாய்க்கு ஜெபத்தின் மூலம் நல்ல கண் பார்வை கிடைத்தது.

**Pr. கேம்சந்த் Z. மாவி** **போர்கேடா**

சகோ. தேர்சிங் பாய் அவர்களின் பிள்ளைகள் வாந்தி, வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்ட நேரத்தில், இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தினைக் கொடுத்தார்.

சவிதாபேன் என்ற சகோதரிக்கு தலைச்சுற்று ஏற்பட்டு கஷ்டப்பட்டபோது, இவருக்காக ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தினைக் கொடுத்தார்

**Pr. சாகன்** **வாங்கோல்**

ஜோஸ்னா என்ற சகோதரி பேச முடியாமல் கஷ்டப்பட்டிருந்தபோது, இவருக்காக ஜெபித்தபோது தேவன் தடையை நீக்கி பேச கிருபை செய்தார்.

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. ஹிர்ஜி J. பான்டா** **காசர்வாடி**

சாத்தான் பிடியில் பாதிக்கப்பட்டு கை, கால் வேதனையுடன் அவதிப்பட்டு, மருந்துகள் சாப்பிட்டும் பூரண சுகம் கிடைக்காமல் வாருபாய் என்பவர், நமது சபைக்கு வந்து ஜெபித்தபோது, தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

**Pr. ஹர்திங் B. மேடா** **பார்தியா**

கை, கால் வேதனையில் அவதிப்பட்டு வந்த ரமனிபேனுக்கு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. ஹிராலால் H. கட்டாரா** **நவாபாடா**

பயங்கர வியாதியின் பிடியிலிருந்த காளியா பேன் என்ற சகோதரிக்காக ஜெபித்தபோது, கர்த்தர் அவரின் வியாதியை நீக்கினார்.

மக்கன் பாயின் மகளுக்கு எல்லா வியாதிகளையும் தேவன் அற்புதமாக மாற்றினார்.

**Pr. ஹக்ரா R. தாமா** **வாசுனி**

ஹங்கிபாய்க்குப் பிடித்திருந்த சாத்தான், ஜெபத்தின் மூலம் விலகியது.

ஏத்ரிபேன் என்பவரை தேள் கடித்துவிட்டது. ஜெபத்தின் மூலம் வேதனைகள் நீங்கியது.

**Pr. ஹராலால் T. பகோரா** **காலகூட்டா**

சம்பு என்ற சகோதரரின் குடும்பம் முழுவதும் பிசாசின் பிடியில் வேதனைப்பட்ட சூழ்நிலையில் சபைக்கு வந்து ஜெபித்தபோது, பிசாசு தொந்தரவுகளை தேவன் மாற்றினார்.

**Pr. பதமிலால் பாரியா** **கோடா**

துலி பேன் என்ற சகோதரிக்கு சுய நினைவு இல்லாமல் போய்விட்டது. இவருக்காக ஜெபித்தபோது தேவன் சுயநினைவை திரும்பக் கொடுத்தார்.

ஹங்சிங் பாய் என்ற சகோதரருக்கு வயிறு வலி மற்றும் கை, கால்களில் பெலவீனம் ஏற்பட்டு அவதிப்பட்டபோது, இவருக்காக ஜெபிக்கவே தேவன் ஜெபத்தினைக் கேட்டு பூரண சுகத்தினைக் கொடுத்தார்

**Pr. புரலால் D. கட்டாரா** **நவஹாவ்**

ஆம்ளிப்பாடா கிராமத்திலுள்ள ரேக்கா பேன் என்ற சகோதரிக்கு வயிற்று வீக்கம், கை, கால் வலி ஏற்பட்டு, கஷ்டப்பட்டு வந்த நிலையில், ஜெபித்தபோது தேவன் அற்புத சுகம் கொடுத்தார்.

நூர்ஜிபாய் என்ற சகோதரர் சாத்தானின் பிடியில் சிக்கி அவதிப்பட்டு வந்த நிலையில் அவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. துபலியா மேடா** **நகர்புரா**

தீராத வயிற்றுவலியினால் கஷ்டப்பட்டு வந்த சகோ. ராகுல் பாய்க்கு மருந்துகள் சாப்பிட்டும் சுகம் கிடைக்காமல், நமது ஷாலோம் சபை ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபிக்கவே, தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

10 வயதான முகேஷ் என்ற சிறுவனை தேள் கடித்துவிட்டது. ஜெபத்தின் மூலம் தேவன் வேதனையை மாற்றினார்.

**Pr. தினேஷ் M. புரியா** **குவாளி**

பயங்கரமான வியாதியில் கஷ்டப்பட்டு வந்த சாரதா பேனுக்காக ஜெபித்தபோது, தேவன் பூரண சுகம் கொடுத்தார்.

**Pr. தும்சிங் M. பாரியா** **நவகாம்**

6 வயதான அபிஷேக் என்ற சிறுவன் வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கினால் அவதிப்பட்ட நிலையில், அவனுக்காக ஜெபித்தபோது, தேவன் சுகம் தந்தார்.

**Pr. தும்சிங் புரியா** **மன்கா**

ஜெம்லிபேன் என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. இவருக்காக ஜெபித்தபோது, தேவன் இந்த சகோதரியின் உயிரைப் பாதுகாத்தார்.

லலிதா என்ற சகோதரியை பாம்பு கடித்ததால் விஷம் சரீரத்தில் ஏறிவிட்டது. எண்ணெய் பூசி ஜெபித்தபோது அவரது உயிரை தேவன் பாதுகாத்தார்.

ஜெம்லா பேனுக்கு இருந்து வந்த தலை வேதனை ஜெபிக்கவே முற்றிலுமாய் மாறியது.

**Pr. தேவ்சிங் M. ஹோக்ரி** **தாந்தல்புரா**

ஹரித்து பேன் என்ற சகோதரிக்கு கை, கால் வலியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை கிடைத்தது.

6 வருடமாக பக்க வாதத்தினால் கஷ்டப்பட்டு வந்த நான்சிங்பாய் என்ற சகோதரருக்காக ஜெபித்தபோது தேவன் பூரண சுகம் தந்தார்.

ரமிலா பேன் என்ற சகோதரிக்கு சரீர வீக்கத்திலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் கிடைத்தது.

**Pr. காளியா N. தேவதா** **தெத்தம்**

ரம்தா பேன் என்ற சகோதரி வாந்தி, வயிற்றுப்போக்கு மற்றும் வயிற்றில் எரிச்சல் ஏற்பட்டு கஷ்டப்பட்ட நிலையில் இவருக்காக ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தினைக் கட்டளையிட்டார்.

அசுத்த ஆவியினால் கஷ்டப்பட்ட கருவா பேன் என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை கொடுத்தார்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 6

**பதில் எழுதுக :**

1. தன் மரண நாள் மட்டும் குஷ்டரோகி–யாயிருந்த ராஜா யார்?
2. எபிரோனுக்கு மறு பெயர் என்ன?
3. சந்திரன் தரித்து நின்ற இடம் எது?
4. நோவா செய்த பேழை எந்த மரத்தால் உண்டாக்கப்பட்டது?
5. கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்–காரனாயிருந்தவன் யார்?
6. யார் யாரை கர்த்தர் அருவருக்கிறார்?
7. எது வார்த்தைகளைச் சோதித்துப் பார்க்கும்?
8. யோவாஸ் ராஜாவின் தாயாகிய சிபியாள் எந்த ஊராள்?
9. யாருடைய வேர் கனி கொடுக்கும்?
10. கோபத்தின் கோல் யார்?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **15.09.2013**

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

| | |
|---|---|
| 1. வசனம். (சங். 119 : 50) | 6. யோவாஸ் (II இராஜா. 11:21) |
| 2. செருபாபேல் (ஆகாய். 2 : 23) | 7. எப்சிபாள் (II இராஜா. 21:1) |
| 3. யோசுவாவின் அக்கிரமம் (சகரியா 3:3,4) | 8. மதியற்ற ஸ்திரி (நீதி. 9:13) |
| 4. அபியா (லூக் 1:5) | 9. ஆமோஸ் (ஆமோஸ் 7:14) |
| 5. யோசுவா (யாத். 33:11) | 10. ஆசாரியன் (மல்கியா 2:7) |

**கடந்த மாத வேத வினாப் போட்டி 5–ல் சரியான விடையினை தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. பத்மினி டேவிட், சென்னை. 2. Dr. சொரூபராணி, சங்கரன்கோயில்.**

**3. Sis. மெர்சிபிரபாகர், மதுரை**

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்...



- குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

- பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளியும் நடைபெற்றுவரும் சுகமளிக்கும் ஆராதனைக்காக, அதில் அநேகர் பங்குபெற்று அற்புதங்களைப் பெற்று தேவனண்டையில் சேர ஜெபியுங்கள்.

- தேவ கிருபையினால் தற்போது 3 மாநிலங்களிலுள்ள 26 கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், அதற்கான தேவைகளை தேவன் சந்தித்து, ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

- செப்டம்பர் மாதம் 27ம் தேதி வெள்ளிக்கிழமை நமது பணித்தளத்திலுள்ள அனைத்து சபைகளிலும் ஷாலோம் அற்புதத்தின் நாள் ஆசரிக்கப்பட உள்ளது. அந்நாளில் தேவன் பல ஆயிரம் அற்புதங்களை சுதேச ஊழியர்கள் மூலம் நடப்பிக்கவும், அநேக ஆயிரம் குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும் விசேஷமாக ஜெபியுங்கள்.

- குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் 3 மாநிலங்களில் உள்ள அனைத்து சபைகளின் வாலிப ஆண்கள், பெண்களுக்கான முகாம்கள் **செப்டம்பர் மாதத்தில்** 8 நாட்கள் 8 இடங்களில் சுமார் 3000 வாலிப ஆண்கள், பெண்களுக்கு நடத்தப்பட உள்ளது. தேவன் அனைவரையும் பரிசுத்தத்திற்கு நேராக நடத்த, அபிஷேகிக்க, வாலிபர்களை இந்தியாவின தூண்களாய் எழுப்பவும் பாரத்துடன் ஜெபியுங்கள்.

- இவ்வருடம் ஷாலோம் **மிஷன் ஞாயிறு** மத்தியப்பிரதேசத்தில் **06.10.2013** அன்றும், குஜராத்தில் **13.10.2013** அன்றும், மத்தியப்பிரதேசத்தில் **20.10.2013** அன்றும் கொண்டாட தீர்மானித்து செயல்பட்டு வருகிறோம். ஸ்திர சபைகளாக, ஜெபிக்கும் சபைகளாக, ஆத்தும ஆதாயம் செய்யும் சபைகளாக, தேவனுக்காக கொடுக்கும் சபைகளாக ஷாலோம் திருச்சபைகள் விளங்க ஜெபியுங்கள்.

- **பேராயர். தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.

❋ பணித்தளத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வரும் **ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காகவும்**, அதில் பொறுப்பேற்றுள்ள **Dr. இன்பக்குமார்** அவர்களுக்காகவும் ஜெபியுங்கள். மேலும் இந்த மருத்துவமனை மூலம் அநேக ஏழை ஆதிவாசி ஜனங்கள் பயனடையவும், இதன் தேவைகள் சந்திக்கப்படவும், இதன் மூலம் தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

❋ திருநெல்வேலிப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஷாலோம் முன்னேற்றப் பணி அலுவலகத்திற்காகவும், அதில் பொறுப்பேற்றுள்ள **சகோ. டேவிட்** அவர்கள குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள். மேலும் இதன் மூலம் ஷாலோம் முன்னேற்றப் பணிகளில் தேவன் பெரிய காரியங்களைச் செய்ய ஜெபியுங்கள்.

❋ குஜராத் பணித்தள அலுவலகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த தேவப் பிள்ளைகளை தேவன் கொண்டுவரும்படியாக ஜெபியுங்கள்.

❋ பணித்தளங்களில் தேவன் நல்ல மழையைத் தந்து வருகிறார். அதற்காக தேவனைத் துதிப்போம். மேலும் பீல் ஜனங்கள் செய்யும் விவசாயங்களை ஆசீர்வதித்து நல்ல விளைச்சல்களைத் தரவும், அவர்களை தேவன் உயர்த்தவும் ஜெபியுங்கள்.

❋ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகம் போன்ற அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளை சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

❋ Shalom Charity Mission மூலமாக தாங்கப்பட்டு வரும் பீல் ஆதிவாசி மாணவர்களை தேவன் நல்ல ஞானத்தைத் தந்து ஆசீர்வதிக்கவும், அவர்களின் கல்வித் தேவைகளை சந்திக்கவும், ஆதரவாளர்கள் இல்லாத மாணர்களுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

❋ உயர்கல்விக் பயின்று வரும் மற்றும் உயர் கல்விக்கா காத்திருக்கும் நமது பீல் ஆதிவாசி மாணவர்களில் 206க்கும் அதிகமானோருக்கு அவர்களின் கல்விக்குத் தக்கவாறு ஒரு மாணவருக்கு வருடத்திற்கு ரூ. 10,000/– (அ) ரூ. 20,000/– (அ) ரூ. 30,000/– தேவைப்படுகிறது. தேவைகள் சந்திக்கப்படவும், ஆதரவாளர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

❋ இந்த 2013ம் ஆண்டிற்குள் சுமார் 7000ம் பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கு ஒரு வேதாகமத்திற்கு ஆகும் செலவு ரூ. 100/– ஆகும். 7000 வேதாகமங்களுக்கான தேவைகள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

# போப் நினைவு மேல்நிலைப் பள்ளி,

## சாயர்புரம்

சாமுவேல் சாயர் என்ற வள்ளல் பெருமகனாரால் 1814 ஆம் ஆண்டு சாயர் என்னும் ஊர் உருவாக்கப்பட்டது. 1844 ஆம் ஆண்டு சமயத்தொண்டராக இங்கிலாந்தில் இருந்து வந்த டாக்டர் **G.U. போப்** அவர்கள் ஓர் கிறிஸ்தவ சமயக்கல்லூரியை நிறுவினார். இந்த கல்லூரிக்கு லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் 1858ல் ஒரு நூல் நிலையம் அமைக்க பொருளுதவி அளித்தது. சென்னை பல்கலைக்கழகத்தால் 1880ல் ஒரு கல்லூரியாக அங்கீகரிக்கப்பட்டது.

**மறைதிரு. ஷாரக** அவர்கள் அன்றைய கல்லூரி முதல்வராக இருந்தார். பின்பு இக்கல்லூரி கால்டுவெல் அத்தியட்சரால் 1883ல் தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டது. அந்நாள் முதல் அது ஒரு நடுநிலைப்பள்ளியாக இயங்கிவந்தது. கனம். **W.A. சிரோமணி ஐயர்** தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். **கனம் S.காலேப் ஐயர்** 1906ல் இருந்து தலைமை ஆசிரியராக பணியாற்றினார். திரு. அப்பாவு ஜேசுதாஸ் 1918 முதல் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆனார். அவர்களின் பெரும் முயற்சியால் போப் பழைய மாணவர் சங்கம் நிறுவப்பட்டு இந்நாள் வரை சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பள்ளியின் முன்னாள் மாணவர்களின் முயற்சியால் 1930 ஆம் ஆண்டு போப் நினைவு உயர்நிலைப்பள்ளியாக உயர்ந்தது. தமிழை தாய்மொழியாகப் பெறாத ஒருவர் தமிழகத்தை தன் தாயகமாக கொண்டு தமிழ் அறிஞராய் திகழ்ந்து, தமிழ் வளர அயராது பணிபுரிந்து செந்தமிழ் செம்மலாக இம்மண்ணுக்கு தம்மையே தத்தம் செய்து வாழ்ந்த பேரறிஞர் டாக்டர் **G.U.போப்** இதை உருவாக்கியது சாலச்சிறந்தது.

1933 ஆம் ஆண்டில்தான் இப்பள்ளியின் மாணவர்கள் முதல் முறையாக அரசு தேர்வு எழுதினார்கள். 1831 ல் பள்ளி வளாகத்தில் கனம். பிரன்ச் ஐயர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட புனித மிகாவேல் சிற்றாலயம் புதுப்பிக்கப்பட்டு புது பொலிவு பெற்றது. பழைய மாணவர்களின் முயற்சியால் 1932ல் 4 வகுப்பறைகளைக் கொண்ட New Block கட்டப்பட்டது. 1944ல் பள்ளியின் நூற்றாண்டு விழா **A.V. தாமஸ்** அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நூற்றாண்டு மண்டபம் கட்ட **திரு. A.V. தாமஸ்** அவர்கள் அடிக்கல் நாட்டி, முதல் நன்கொடையாக ரூ. 3000 கொடுத்து உதவினார்கள். 1955 ஆம் ஆண்டு அன்றைய தமிழக முதல்வர் **மாண்புமிகு. கு. காமராஜர்** அவர்களால் நூற்றாண்டு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. 1962 ஆம் ஆண்டு இப்பள்ளியின் முன் பகுதியை கல்லூரி வளாகமாகப் பயன்படுத்தி வந்தனர். 1964 ஆம் ஆண்டு கல்லூரி தற்போது இருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது.

1978 ஆம் ஆண்டு போப் நினைவு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளியாக உயர்வு பெற்றது. 1985 ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கத்தில் பொன் விழா கட்டிடம் கட்டப்பட்டது. போப் முன்னாள் மாணவர் சங்க வைர விழா கட்டிடத்தில் மேல்பகுதி 1989 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இப்பள்ளி **போப் ஐயர்** அவர்களால் துவங்கப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவை சிறப்பாக 1994 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. இத்தனை ஆண்டுகள் நீண்டு சேவை




செய்த இப்பள்ளியினை முன்னேற்றப் பாதையில் நடத்திச் சென்ற புகழ் பெற்ற தலைமை ஆசிரியர்கள், முழு ஈடுபாடுகளுடன் சேவை செய்த ஆசிரியர்பெருந்தகைகள், ஊழியர்கள், மேலும் நன்றி உணர்வோடும், பாசத்தோடும் செயல்பட்ட இப்பள்ளியின் முன்னாள் மாணவர்கள், சாயர்புரம் மறை வட்ட குருவானவர்கள், இப்பள்ளி தங்களது என்று சொந்தம் கொண்டாடும் ஊர் பொது மக்கள் அவர்களின் ஒவ்வொருவரின் பெயர்களைக் குறிப்பிட்டாக வேண்டும். எந்த நபரையும் விட்டுவிட முடியாது. அத்தனைபேரும் ஏதாவதொரு விதத்தில் சிறப்பு மிக்கவர் ஆவார். அனைவரின் ஒருங்கிணைந்த உழைப்பால் தான் போப் நினைவு பள்ளி போல் தலைசிறந்த கல்விக் கூடங்களை உருவாக்க முடியும். **போப் ஐயரவர்கள்** தன் நாட்டிலிருந்து சென்னைக்கு வர கப்பலில் 8 மாதங்கள் பயணம் செய்தார்கள். அந்த நாட்களை வீணடிக்காமல் தமிழைக் கற்றுத்தேறி, தாம் சென்னை வந்து சேர்ந்ததும் மைலாப்பூர் சாந்தோம் தேவாலயத்தில் தமிழில் தமது முதல் பிரசங்கத்தைச் செய்தார்கள்.

அவர்களின் ஆற்றல் விடாமுயற்சி அனைத்தும் அவர் பெயரை தாங்கி நிற்கும் இப்பள்ளியில் கற்றோருக்கும் மற்றோருக்கும் இயல்பாக கிடைத்துள்ளது இறைவன் செயலே. இப்பள்ளியின் அடையாளச் சின்னம் ஆலமரம். இது போப் அவர்கள் தேர்வு செய்து உண்மையிலிருந்து ஆலமரம் போல் கணக்கில் அடங்காத விழுதுகளை இப்பள்ளி 150 ஆண்டுகளாக சேவை செய்து உருவாக்கி உள்ளது. இப்பள்ளியில் முன்னாள் மாணவர்களில் பலர் உலகமெங்கும் உயர்ந்த பதவிகள், வகித்து சிறந்த செல்வந்தராய் விளங்கி நம் நாட்டு அரசுத்துறையிலும் உயர் பதவிகளிலும் சிறந்து பணியாற்றி இப்பள்ளியின் புகழை எத்திசையிலும் பரவ செய்துள்ளனர்.

இப்பள்ளியின் குறிக்கோள் வாக்கியம் என்னவென்றால் “முதல்வனாயிரு அல்லது முதல்வனோடிரு” என்பதே. போப் அவர்கள் தம் வாழ்வில் முதல்வராய் இருந்து தமிழ் கல்வியாளராய் திகழ்ந்து, தமிழுக்கு அரிய தொண்டாற்றி, அநேக முதல்வர்களின் நட்புகொண்டு சிறப்புற்றது அனைவருக்கும் சிறந்த மாதிரியன்றோ. இப்பள்ளியில் கல்வி கற்றோரும் கல்வி கற்பித்தோரும் இந்த உயரிய இலக்குடன் பெரும் முயற்சி எடுத்து கொண்டதால் இன்றும் இந்த பள்ளி உலகெங்கும் பெருமையாக பேசப்படும் முதல் பள்ளியாக திகழ்கின்றது. மேலும் போப் நினைவு மேல்நிலைப்பள்ளி, கைபந்து பேட்மிட்டன் ஆட்டத்தில் பல கேடயங்கள் பெற்று தமிழகத்தில் உயர்ந்து விளங்கியது.

மேற்கத்திய இசையில் அநேக வல்லுனர்களை உருவாக்கி சிறந்த குரல்வளம் மிக்க பாடகர் குழுவையும் கொண்டது இப்பள்ளியாகும். இப்பள்ளியில் 8 ஆண்டுகள் கணித பட்டதாரி ஆசிரியராக பணி செய்யும் பாக்கியம் பெற்றமைக்கு நான் பெருமிதம் கொள்கின்றேன். தற்போது சுமார் 40 ஆசிரியர்கள், ஊழியர்கள், பணியாற்றி வருகின்றனர். சுமார் 1300 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இப்பள்ளி மென்மேலும் சிறக்க இனிதே வாழ்த்தி மகிழ்கின்றோம்.

போப் நினைவு பள்ளியின் 150 ஆண்டு சேவையை சில பக்கங்களில் எடுத்துக் கூறுவது மிகவும் கடினம். ஆனாலும் இப்பள்ளியின் சரித்திரம் நம் பத்திரிகையில் ஏன் இடம் பெற்றுள்ளது என்றால் நம் தலைமுறை மக்களை சிந்திக்க வைக்கவே. 100 ஆண்டுகளுக்கு முன்பு மேற்கத்திய நாட்டிலிருந்து G.U. போப் போன்ற இயேசுவின் பால் அன்புகொண்டு, நமது தாயகத்தின் அப்போது வாழ்ந்து வந்த பாமர மக்களை கல்வியிலும், ஒழுக்கத்திலும், நாகரீகத்திலும், ஆன்மீக வாழ்விலும் முன்னேற்றம் பெற உழைத்து இறைவனின் அடிகளாரை நன்றியுடன் நினைவுகூறும் நாம், நமது தலைமுறையில் வட இந்தியாவில் உள்ள பீல் ஆதிவாசி மக்களைத்தேடி Bro. V. தேவதாஸ் அவர்களும், அவர்கள் துணைவியார் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களும் கடந்த 22 ஆண்டுகள் அவர்கள் மத்தியில் பணி செய்து அம்மக்களை முன்னேற்றப் பாதையில் நடத்தி வருகின்றனர். சற்றேனும் கல்வி அறிவற்ற, நாகரீகமற்ற மக்களை இயேசுவின் அடியவர்களாக்கி சமுதாயத்தில் மேல்நிலைக்கு உயர்த்தி வருகின்றனர். பீல் ஆதிவாசி ஏழைப் பிள்ளைகள் 947 பேர் இலவசமாக கல்வி, தங்கும் வசதி, உணவு போன்ற இன்றியமையாத தேவைகளை பெற்று வருகின்றனர். இவர்களில் அநேகர் கல்வியில் சிறந்து விளங்கி, உயர்கல்விகற்கும் அளவிற்கு உயர்ந்துள்ளனர். இன்னும் சில ஆண்டுகளில் அவரவர் மாநிலத்தில் அரசுத்துறையில் உயர் பதவிகள் வகித்து நிச்சயமாக உயர்ந்திடுவர். நாம் இப்போது பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் 147 மாணவர்களுக்கு ஆதரவாளர்கள் தேவை மாதம் ரூ. 600/- கொடுத்து தாங்கும் ஆதரவாளர்கள் மிக அவசரத் தேவையில் உள்ளது. மேலும் உயர்கல்வி கற்க முன்வரும் 206 பிள்ளைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 20,000/- தேவைப்படுகிறது.

நம் தலைமுறையில் இந்த பேருதவியைச் செய்தால் இன்னும் 10 ஆண்டுகளுக்குள் பீல் ஆதிவாசி மாணவர்கள் உயர் பதவிகள் பெற்று தங்கள் குடும்பத்தையும், தங்கள் சமுதாயத்தையும் உயர்த்தும் வல்லுனர்களாக தன்நிறைவு பெற்று திகழ்வர். அன்று நம் உதவியின் பலாபலனை நேரில் கண்டு கிறிஸ்துவுக்குள் நாம் மகிழ்வோம். நமது ஆண்டவரும் “இந்த சிறியருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்” என்று நம்மைக்குறித்து பூரிப்படைந்து அகம் மகிழ்வார். செல்வம் வளமாக பெற்றோர் இப்பிள்ளைகள் தங்கி படிக்க ஒரு விடுதி கட்டிக் கொடுக்கலாம். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் நீங்கள் உதவலாம் அல்லது உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு இந்த பணியை அறிமுகம் செய்து உதவலாம். இன்று சாயர்புரம் மாணவர்கள் உலகெங்கிலும் உயர்ந்து விளங்குவதுபோல, நம் தலைமுறை பீல் இன மாணவர்களும் உலகெங்கும் உயர்ந்து விளங்குவர். இதுவே நமது அசையாத நம்பிக்கை. கர்த்தர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக.

## காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

**AXIS BANK** — **A/c. No. : 105010100094373 (IFS Code : UTIB0000105)**

**ICICI Bank** — **A/C. No. 613901112799 (IFS Code : ICIC0006139)**

*குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,*

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்....

ஸ்பெயினின் வட மேற்குப் பகுதியில் ரயில் ஒன்று தடம் புரண்டதில் 77 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மட்ரிக் நகரத்திற்கும் ஃபெர்ரோல் நகரத்திற்கும் இடையே ஓடிய அந்த ரயில் தண்டவாளத்திலிருந்து வழுவியது. ஸ்பெயினைப் பொருத்தவரை இது மிகப் பெரிய ரயில் விபத்தாகும்.

பீஹார் மாநிலத்தில் இலவச உணவு நஞ்சானதால் 22 க்கும் அதிகமான பள்ளிச் சிறார்கள் பலி. சாரண் மாவட்டத்தில் மஸ்ராக் என்ற கிராமத்தைச் சேர்ந்த அரசு பள்ளிக்கூடத்தில் நடந்துள்ள இந்தச் சம்பவம் பற்றி விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. உயிரிழந்த சிறார்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் வீதம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் அரசு பள்ளிக்கூடங்களில் வழங்கப்படும் இலவச மதிய உணவில் போதுமான சுத்தம் பேணப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது.

அமெரிக்காவிலுள்ள ஆய்வாளர்கள் புதிய டைனோசோர் இனம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த டைனோசோர் ஐந்து மீட்டர் நீளம் வளரக்கூடியதாகவும், இரண்டாயிரத்து ஐநூறு கிலோ பருமன் கொண்டதாகவும் இருந்துள்ளது. மிகப் பெரிய மூக்கும் அளவுக்கதிகமான நீளம் கொண்ட கொம்பும் இதற்கு இருந்துள்ளது. இந்த ராட்சத விலங்கினம் ஏழரைக்கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வாழ்ந்திருந்தவை என யூட்டா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்லுயிரியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஸ்டெகெர்ப் என்ற மார்பகப் புற்றுநோய் மருந்து ஒன்றுக்கு கிளாக்ஸோ ஸ்மித்கிலைன் என்ற மருந்து உற்பத்தி நிறுவனம் அனுபவித்து வருகின்ற அறிவுசார் காப்புரிமையை இந்தியாவின் அறிவுசார் காப்புரிமை வழக்குகளுக்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (ஐபிஏபி) ரத்து செய்துள்ளது.

நன்றி : www.bbc.co.uk

## எங்களுடன் தொடர்பு கொள்ள


<u>தலைமை அலுவலகம்</u>

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**





## லாலா வாடா இராஜஸ்தான்

லாலா வாடா என்ற இந்தக் கிராமம் இராஜஸ்தான் மாநிலம், பான்ஸ்வாடா மாவட்ட நகரத்தில் இருந்து மிகவும் உள்ளடங்கிய மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ளது. இங்கு வாழும் பீல் ஆதிவாசி மக்கள் இயேசுவின் அன்பை அறியாது இறந்த ஆவிகளை வழிபட்டு வரும் பழக்கமுடையவர்கள். இவர்கள் தொழில், சாராயம் காய்ச்சி விற்பதும் மழை பெய்தால் மட்டும் விவசாயம் செய்வதுமே. இப்படிப்பட்ட சூழ்நிலையில், பாவத்திலும் சாபத்திலும் வாழ்ந்தவர்தான் சகோ. சிவலால் பட்டேல்.

சகோ. சிவலால் பட்டேல் தனது வயிற்றில் ஏற்பட்ட ஒரு கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். அதிக அளவில் பணம் செலவு செய்து மருத்துவம் பார்த்தும், மந்திரக் கிரியைகள் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. மிகவும் சோர்ந்து போன நேரத்தில் காரியா என்ற கிராமத்தில் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு அங்கு சென்று, கூட்டத்தில் பங்கேற்றார். கூட்டத்தின் ஜெபவேளையில் கட்டிக்காக பாரத்தோடு ஜெபித்தார். தேவன் ஜெபத்தினைக் கேட்டு வயிற்றில் இருந்த கட்டியினை உடனடியாக மறையச் செய்தார். இந்த அற்புதத்தினால் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.

விசுவாசத்திலும் வேத அறிவிலும் வளர்ந்து வந்த இவருக்கு தேவன் ஊழியம் செய்யும்படியான பாரத்தினைக் கொடுத்தார். ஆகவே தனது வீட்டில் சுதேச ஊழியர் மூலம் ஜெபக்கூட்டம் ஆரம்பித்தார். அதன்பின் தன்னை முழுமையாக ஊழியத்திற்கு அர்ப்பணித்து 2004–ல் மேம்தாபாத்தில் நடைபெற்ற ஊழியர் பயிற்சியில் கலந்து கொண்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று ஊழியம் செய்து வருகிறார். நாட்கள் செல்லச் செல்ல அநேக விசுவாசிகளை தேவன் சபைக்குத் தந்தார். வீட்டில் இருந்து ஆராதிக்க இடம் பற்றாக்குறையானதால், தனது சொந்த நிலைத்தை காணிக்கையாக ஆலயம் கட்டும்படியாகத் தந்தார். அந்த நிலத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக அழகிய கிராம ஆலயம் கட்டி, பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஊழியம் நடைபெற்று வருகிறது. தற்போது 30க்கும் அதிகமான குடும்பத்தார் இங்கு தேவனை ஆராதித்து வருகிறார்கள்.

இந்த கிராம ஆலயம் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த **சகோ. *K.N.* ராஜன்** (இயேசு அற்புதம் செய்கிறார் ஊழியம்) அவர்கள் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலமாகக் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013ம் ஆண்டிற்குள் 85 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

**BLESS A CHILD - PROJECT**



மாணவனின் பெயர் : **ஆசிஸ் பபேரியா**

தந்தையின் பெயர் : ஜானு பபேரியா

தாயார் பெயர் : ரீமா பபேரியா

பிறந்த நாள் : 10.06.2005

படிக்கும் வகுப்பு : 2nd Std.

சொந்த ஊர் : காளாகூட்

மாவட்டம் & மாநிலம் : ஜாபுவா, மத்தியப்பிரதேசம்

**மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–**

இவனுடைய தந்தை சகோ. ஜானு பபேரியா. இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது முழு குடும்பமும் மிகவும் அந்தகாரத்திலும், சமாதானமின்றியும் காணப்பட்டது. இந்த சூழ்நிலையில் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு, நமது ஷாலோம் ஊழியர் சகோ. ஹிம்ராஜ் அவர்களிடம் சென்று ஜெபித்தபோது, தேவன் அவர்களை அந்தகாரத்திலிருந்து விடுதலையாக்கி சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொடுத்தார். ஆகவே கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபையின் மூப்பராக இருக்கிறார்.

**மாணவனைக் குறித்து :–** ஆசிஸ் நன்கு படிப்பவன். விளையாட்டில் ஆர்வம் உண்டு.

**ஜெபியுங்கள் :–** படிப்பிற்காக, சுகத்திற்காக, பெற்றோர் செய்யும் வேலைக்காக ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** ***Mr. Paulson Priyadan - Chennai.***

**ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்...**

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் 147 **மாணவர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.